பக்கங்கள் 8 விலை சதம் 40 ★★

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 ஆனி 18 றஜப் 14 இதழ்: 141
யாழ்ப்பாணம் சனி கிழமை -7 77

# பிரதமர் இன்று காலை கிளிநொச்சி விஜயம்

## புதிய நகர மண்டபத்தை திறந்துவைப்பார்

கிளிநொச்சி, சனி

பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இன்று காலை 9-30க்கு கிளிநொச்சிக்கு விஜயம்செய்வார்.

கிளிநொச்சி நகரமண்டபம், வரவேற்புக்கூடம், சந்தை ஆகியவற்றைகாலையில் திறந்து வைக்கும் பிரதமர், கிளிநொச்சி ஸ்ரீ. ல. சு. அபேட்சகர் அமைச்சர் செல்லையா குமாரசூரியரை ஆதரித்து காலையில் நடைபெறும் பிரச்சாரக்கூட்டத்திலும்உரைநிகழ்த்துவார்.

இன்று சனிக்கிழமை காலை 9-30க்கு பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஹெலிகொப்டர் மூலமாக கிளிநொச்சி றெட்றிக்கோ மைதானத்தில் அமைக்கப்பட்டிருக்கும் அலங்கார மேடைக்கண்மையில் வந்திறங்குவார்.

பிரதமரை தபால்தந்திகள் தொடர்பு, கட்டிடநிர்மாணத் துறை அமைச்சர், திரு. செ. குமாரசூரியர், பட்டினவிஷேட

(8ம் பக்கம் பார்க்க)

# 'சிறுபான்மை மக்களின் உரிமைகள் வழங்கபடாதவரை நாடுமுன்னேறாது'

## இலங்கை ஆசிரியர் சங்க மாநாட்டில் தலைவர் கண்டனம்

யாழ்ப்பாணம், சனி

**"தமிழர் கூட்டணிக்கு தமிழ் பேசும் மக்கள், குறிப்பாக இளைஞர்கள் ஆதரவு கொடுப்பதற்கு காரணம், பெரும்பன்மை சமூகந்தான். அரசியல் கட்சிகள், சிறுபான்மையினரின் உரிமைகளை புறக்கணிப்பதேயாகும். இந்நாட்டின் முன்னேற்றம் சிறுபான்மையினரின் உரிமைகளை வழங்காதவரை ஏற்படாது."**

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடந்த இலங்கை ஆசிரியர் சங்க 20-வது வருடாந்த மாநாட்டிற்கு தலைமை தாங்கிய சங்கத் தலைவர் திரு. எச். என். பெர்ணண்டோ மேற்கண்டவாறு கூறினார்.

நாடு பூராவுமிருந்து சுமார் ஏழாயிரத்திற்குமேற்பட்டஆசிரியர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

திரு. எச். என்' பெர்ணண்டோ மேலும் கூறியதாவதாவது: 'இலங்கை ஆசிரியர் சங்கம், ஆசிரியர்களின் உரிமைகளை மட்டுமல்லாது, தொழிலாளர், பாட்டாளிகளின் நல்வாழ்வுக்குமாக போராடி வந்திருக்கிறது.

### துரையப்பா வழக்கு

துரையப்பா கொலை வழக்கில் 7 தமிழ் இளைஞர்கள் மீதான விசாரணை, 'ட்ரயல் அட்ப்பார்' நீதிமன்றத்தில்நடப்பதை ஆட்சேபித்து ஜூரிசபை முன் விசாரணை நடத்த வேண்டும் எனகுரல் எழுப்பியது ஒரே ஒரு ஆசிரியர் சங்கம் இலங்கை ஆசிரியர்சங்கம் தான்.

இலங்கையிலுள்ள தொழிற் சங்கங்கள் சிறுபான்மை மக்களின் உரிமைகள் பற்றி குரல் எழுப்பாத காரணத்தினால் தமிழ்பேசும் மக்கள் பிரிந்து மொழிவழி தொழிற் சங்கங்கள் ஆரம்பித்து வருகின்றனர் இப்படியான செயல் தொழிற் சங்கங்களை பலவீனப்படுத்தும் செயலாகும்இலங்கை ஆசிரியர்சங்கத்தை பொறுத்தவரை நாம் சகலமக்களின் உரிமைகளுக்கும் போராடி வருகின்றோம்.

### புதிய கல்வித்திட்டம்

"இத்திட்டத்தின் கல்வித் திட்டம் ஆசியாவிலே சிறந்தது என வெளி நாட்டிலும் இங்கும் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது இங்கு வசதியற்றவர்களின் பிள்ளைகளுக்காகஎதுவிதவசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை

"தோட்டப் பிள்ளைகளின் கல்வி நிலைமை. நூற்றாண்டு காலத்திற்கு முன்பு இருந்தது போலவே இருந்து வருகிறது. நாட்டின் முழு அந்நிய செலவாணியையும் பெற்றுக் கொடுக்கின்ற தோட்டத்தொழிலாளிகளின் பிள்ளைகளால் 38.9 வீதமானோர் எதுவித கல்வி அறிவுமில்லாது வாழ்கின்றனர். 56 சத வீதமான தோட்டப் பெண்கள் ஆரம்பக் கல்வியைக் கூடப் பெறுமலே சிறு வயது முதல் தேயிலை கொய்வதிலேயே ஈடுபட்டுவருகின்றனர். இந்த அநியாயம் உலகில் வேறெங்கும் இடையாது

### கல்வியில் பாகுபாடு

"வசதியுள்ள பிள்ளைகளுக்கும், வசதியற்ற பிள்ளைகளுக்கும் கல்வி புகட்டுவதில் இந்நாட்டில் பாகுபாடு உண்டு. ஆனந்தா, றோயல் கல்லூரி போன்ற பெரும் கல்லூரிகளுக்குக் கடந்த வருடம் 24 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இங்குதான் அமைச்சர்களின் பிள்ளைகளும் உயர் அதிகாரிகளின் பிள்ளைகளும் கற்கிறார்கள். சாதாரணத் தொழிலாளர்களின் பிள்ளைகள் கற்கும் மாளிகாவத்தைப்

[2-ம் பக்கம் பார்க்க]

# புதுவையில் அஇஅதிமுக அமைச்சரவை இன்று பதவி ஏற்பு

சென்னை, ஜூலை. 1

பாண்டிச்சேரியில் எம். ஜி. ஆர்' கட்சியின் 2 உறுப்பினர்கள் கொண்ட அமைச்சரவை இன்று காலை பதவி ஏற்கும் என்று சட்டசபைத் தலைவர் திரு. எஸ். இராமசாமி கூறினார்.

அ. இ. அ. தி. மு. க வுக்கு 16 உறுப்பினர்களின் ஆதரவு உண்டு என்றும் திரு. இராமசாமி கூறினார்.

திரு. இராமசாமியும் அவரது சகாவான திரு டி. இராமச்சந்திரனும் நேற்று சென்னையில் தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனைச் சந்தித்து அமைச்சரவை அமைப்பது குறித்து ஆராய்ந்தனர். (இ)

# இடதுசாரி முன்னணி தலைவர்கள் யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், சனி

இடதுசாரி ஐக்கிய முன்னணித் தலைவர்கள் அடுத்தவாரம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வார்கள்.

டாக்டர் என். எம். பெரேரா திரு. நந்தா எல்லாவெல, திரு. சரத் முத்தெட்டுகம, திருமதி விவியன் குணவர்த்தன, திரு. டி. பி. சுபசிங்கா ஆகியோர் இங்கு வருவார்கள் என்றும் இரண்டு பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்வார்கள் என்றும் தெரியவருகிறது.

## 5-வது மாடியிலிருந்து விழுந்து மரணம்

(கொழும்பு)

கொழும்பு தபால்தந்தி தலைமைக் காரியாலயத்தின் 5-வது மாடியிலிருந்து கீழே விழுந்த தொலைபேசிப்பகுதி ஊழியர் ஒருவர் பரிதாபகரமாக மரணமான சம்பவம் ஒன்று நேற்று மாலை நடைபெற்றது.

மாலை 4 மணிக்கு மாடியிலிருந்து விழுந்த இவர்

(8-ம் பக்கம் பாக்க)

## 6 தீப்பெட்டிகள்

கொழும்பு, வெள்ளி

பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் மூலம், ஒவ்வொரு பங்

(2-ம் பக்கம் பார்க்க)

# 'எக்கட்சிக்கும் ஆதரவில்லை'

## ஆசிரியர்சங்க மாநாட்டில் தீர்மானம்

யாழ்ப்பாணம், சனி

எதிர்வரும் பொதுத்தேர்தலில் எந்த ஒரு கட்சிக்கோ அன்றி தனிநபர் வெற்றிக்கோ ஆதரவளிப்பதில்லை என்று இலங்கை ஆசிரியர்சங்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கை ஆசிரியர்சங்க 20வது மகாநாடு நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றபோது பேற்படி தீர்மானம் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான மேலதிக வாக்குகளைப் பெற்று நிறைவேறியது.

நிறைவேற்றப்பட்ட பிரேரணையில், மக்களின் கோரிக்கைகள், உரிமைகள்' சலுகைகள் ஆகியவற்றை வென்றெடுப்பதற்காகவும் பாதுகாப்பதற்காகவும் ஸ்தாபனரீதியாக ஒன்றிரண்டு போராடவேண்டும் எனவும் இத்தீர்மானத்தில்வலியுறுத்தப்பட்டது

இதே வேளையில், ஆசிரியர்கள் எதிர்வரும் தேர்தலில் இடதுசாரி ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு வழங்கவேண்டுமென்று கொண்டுவரப்பட்ட தீர்மானம் இம்மாநாட்டில் நிராகரிக்கப்பட்டது. (கு-இ)

# "உழைப்பாளர் உயர்வுக்கு அரசுவழிவகுக்கும்

## மரீனா கடற்கரையில் எம். ஜி. ஆா.

சென்னை, ஜூலை 1

"கிராமிய பொருளாதாரத் திட்டங்கள் அபிவிருத்தி செய்யப்படுவதுடன் மகளிர் நலத்தை மேம்படுத்துவதும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியின் உயர்வுமிக்க முதல் பணியாக இருக்கும்" என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அறிவித்தார்.

ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற தமது அமைச்சரவைப் பதவியேற்றபின் வியாழக்கிழமை மாலை சென்னை மரீனா கடற்கரையில் நிகழ்ந்த பிரமாண்டமான பொதுக் கூட்டத்தில் திரு எம். ஜி. ஆர். பேசினார்.

லட்சோப லட்சம் மக்களின் எல்லையில்லா ஆனந்த ஆரவாரத்துக்கிடையே 'பொன்மனச் செம்மல்' தமிழ்நாடு முதல்வர் திரு. எம். ஜி ஆர். பேசுகையில் கூறியதாவது:

"அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் உயர் முன்னுரி

(8-ம் பக்கம் பார்க்க)

## புத்தளத்தில் பிரசாரம்

கொழும்பு, வெள்ளி

கொழும்பு தமிழ் இளைஞர் பேரவையினரும் மகளிர் பேரவையினரும் புத்தளம் தொகுதி த. வி. கூ. வேட்பாளரை ஆதரித்து பிரசாரம்

(2-ம் பக்கம் பார்க்க)

# சிந்தெட்டிக் கற்பூரம்
பெட்டிகளில்

கிடைக்குமிடம்:

## சென்ற் அந்தனிஸ்
## ஹாட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்

516, ஸ்கின்னர்ஸ் ரேட்டுத் தெற்கு,
கொழும்பு - 10

போன்: 24261-5


அளவெட்டி வடக்கு
தவளக்கிரி முத்துமாரி அம்பாள் தொண்டர் சபையால்
நடாத்தப்பட்ட அதிர்ஷ்ட லாபச் சீட்டின்

## பரிசு பெற்றோர் விபரம்

1-ம் பரிசு: இல. 7668 "புவனேஸ்வரி ஹாட்வெயர்" ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்.
2-ம் பரிசு: இல. 0393 மு. சூரியகலா, அளவெட்டி.
3-ம் பரிசு: இல. 1963 ந ஸ்ரீரஞ்சன், அளவெட்டி.
4-ம் பரிசு: இல. 3650 க. ஜெயானந்தன், இளவாலை.
5-ம் பரிசு: இல. 0729 ப. நாகராசா, பண்டத்தரிப்பு.

6572

## வெற்றிடம்

பதவி:-
தொழில் நுட்ப உதவியாளர்

கல்வி:-
க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்பக் கல்லூரியில் கட்டிட நிர்மாணத்துறையில் சித்திபெய்தி இருப்பதுடன் 5 வருட அனுபவம்.

வயது:-
30க்கு மேல்

சம்பளம்:-
தராதரம்; அனுபவம் ஆகியவற்றிற்கு ஏற்பக் கொடுபடும்.

விண்ணப்ப முடிவு திகதி 15-7-77

பொதுமுகாமையாளர்.

**காங்கேசன்துறைத் தொகுதி**
**அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,**
உதவி அரசாங்க அதிபர் அலுவலகம்,
தெல்லிப்பளை.

6554

## பதவி வெற்றிடம்

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தில் கீழ்க் காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் பத்திரத்தில் பூரணப்படுத்தி கல்வித் தராதரப் பத்திரம், பிறப்பு அத்தாட்சிப் பத்திரப் பிரதி, அண்மையில் பெற்ற இருநற்சாட்சிப் பத்திரப்பிரதிகளுடன் 77-07-15க்கு முன்னர் கிடைக்கூடியதாகப் பதிவுத் தபால்மூலம் பொதுமுகாமையாளர், தெல்லிப்பழை ப நோ. கூ. சங்கம். தெல்லிப்பழை என்ற விலாசத்துக்கு அனுப்பவும். விண்ணப்பப் பத்திரங்களைப் பெற விரும்புவோர் ரூபா 1/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர் தபால் கட்டணயுடன் சொந்த விலாசமிட்ட கடிதஉறையும் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

### 1. பேக்கரி மேற்பார்வையாளர்

தகமைகள்:- 6 பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. ப. சாதாரண சித்தியும், இத்தகைய ஒரு பதவியில் பெற்ற இரண்டு வருட கால அனுபவமும்.
வயது:- 23—40 வரை.
சம்பளம்: சம்பள நிர்ணயசபைத் திட்டத்திற்கிணங்க வழங்கப்படும்.

### 2. பாண் சுடுநர்

தகமைகள்:- 8-ம் வகுப்புச் சித்தியும், 4 வருடம் இத்துறையில் பெற்ற அனுபவமும்.
வயது:- 18—40 வரை
சம்பளம்:- சம்பள நிர்ணய சபைத் திட்டத்திற்கிணங்க வழங்கப்படும்.

### 3. உதவிப் பாண் சுடுநர்

தகமைகள்:- 8-ம் வகுப்புச் சித்தியும், இரு வருடம் இத்துறையில் பெற்ற அனுபவமும்.
வயது:- 18—40
சம்பளம்:- சம்பள நிர்ணய சபைத் திட்டத்திற்கிணங்க வழங்கப்படும்.

பொது முகாமையாளர்,
**தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்,**
தெல்லிப்பழை.

2[illegible]-[illegible]-77.

6571

## தாலிக்கொடி திருட்டு!

யாழ்ப்பாணம், சனி
வீட்டில் நித்திரைசெய்துகொண்டிருந்த பெண்ணின் கழுத்திலிருந்த தாலிக்கொடியை அறுத்துக்கொண்டு ஒருவர் ஓட்டம் பிடித்த சம்பவம் தொல்புரம் வழக்கம்பரையில் நிகழ்ந்துள்ளது.

இச்சம்பவம்பற்றி கூறப்படுவதாவது: தொல்புரத்தைச் சேர்ந்த சுழிபுரம் கிராமசபை காவலாளி எஸ்- கிருஸ்ண மூர்த்தி என்பவரின் மனைவி அருகிலுள்ள கோவில் ஒன்றிற்கு திருவிழா பார்க்கச் சென்றுவிட்டு வீட்டில் நித்திரையாக இருந்தபோது இச்சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது

இதுபற்றி சங்கானைப்பொலிசாரிடம் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து புலன்விசாரணையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். [கு]

## அறிவித்தல்

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தில் 12,000 வெற்றுச்சாக்குகளும், தேய்ந்த லொறி ரயர்களும் கேள்விப் பத்திரமூலம் விற்பனைக்குண்டு. 77-07-06-ந் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்கு முன்னதாக ரூபா 200/- மேற்படி சங்கத்தில் கட்டிக் கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளவும். கேள்விப்பத்திரம் 77-07-06-ந் திகதி பகல்4மணிக்கு முன்னர்கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

பொது முகாமையாளர்,
தெல்லிப்பழை
ப. நோ. கூ. சங்கம்.

6570

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல M. B. 15054 D C J
அப்பாப்பிள்ளை வாசுதேவலிங்கம், பண்ணாகம் தெற்கு, சுழிபுரம். வழக்காளி

எதிராக

வயித்திலிங்கம் ஞானசேகரமும் பெண் ஞானேஸ்வரியும் இருவரும் 134 பிறவுண் வீதி யாழ்ப்பாணம். எதிரிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டில் இல ஈடு M. B 15054 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியும் அதனைச் சேர்ந்தவைகளும் 1977ம் ஆண்டு ஜூலை மாதம் 27ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

ரூபா 20225/- மேலும் 30-9-75 தொடக்கம் 28-6-76 வரைக்கும் ரூபா 12500/-க்கு 12 வீத வட்டியும் பின் முழுத் தீர்வைத் தொகைக்கும் இறுபடும்வரை 9 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 792/47.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணம் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று, வண்ணார் பண்ணை வடகிழக்கு இறை முதியரேடையும் மடக்களனியும் அளவின்படி ப. நி. லா. 3ம் குழி 14 2/10 இதில் தெற்குப் புறமாக ப. நி. லா. 1ம் குழி 12 8/10ம கல்வீடும் கிணறும், வான்பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு கந்தையா கணேசுப்பிரபுவுக்கும் பெண் அன்னலட்சுமிக்கும் உரிய ஆதனம். வடக்கு சுப்பிரமணியம் கந்தையாவுக்கும் பெண் கமலாம்பிகை அம்மாவுக்கும் உரிய இதன் மிகுதி ஆதனம். மேற்கு பிறவுண் ரோட் தெற்கு தம்பிராசா வேலுப்பிள்ளையின் உரித்தாளருக்கும் வேலுப்பிள்ளை கைம்பெண் இராசம்மாவுக்கும் உரிய ஆதனம். இது அடங்கலும்.

சி. செ. மாரிமுத்து
நீதிமன்றங்களின் விற்பனவு ஆணையாளரும் விலைமதிப்பாளரும்.

'விதானை வளவு'
சித்தங்கேணி,
20-5-77

6573

**சி. விசுவலிங்கம் J. P,**
சட்டத்தரணி,
152 கோவில் வீதி,
நல்லூர்.

1973ஆம் ஆண்டின்
44-ம் இலக்க
நீதி நிருவாகச்சட்டத்தின்
283-ம் பிரிவின் கீழ்
மரணச் சொத்து
நிருவாகத் தத்துவப் பத்திரம்
வழங்குவதற்கான

## இடைக்காலக் கட்டளை

காலஞ்சென்ற புத்தூர் மேற்கு சின்னத்தம்பி தாமோதரம்பிள்ளை என்பவரின் மரணசாதனம் எழுதப்படாத சொத்துச் சம்பந்தப்பட்ட விடயம்.

வலயம்: யாழ்ப்பாணம்
இல : 263

புத்தூர் மேற்குசின்னத்தம்பி தாமோதரம்பிள்ளை கைம்பெண் செல்லம்மா
மனுதார்

மற்றும்

1. தாமோதரம்பிள்ளை சந்திரசேகரம்
2. தாமோதரம்பிள்ளை தர்மசேகரம்
3. தாமோதரம்பிள்ளை மகள் சாந்தநாயகி எல்லோரும் புத்தூர் மேற்கு, புத்தூர்.

எதிர்மனுதார்

281-ம் பிரிவின் கீழ்த் தாக்கல் செய்யப்பட்டதும், 21-6-76 திகதியிடப்பட்டதுமான விண்ணப்பத்திலிருக்கும் கூற்றுக்கள் பார்த்த மாத்திரத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளதென திருப்தியடைந்த தன் பேரில் 1976 செப்டெம்பர் 17 அன்று அல்லது அதற்குமுன் எவராவது எதிர்க் காரணம் காட்டினலன்றி மேற் சொல்லப்பட்ட மனுதார்காலஞ்சென்றவரின் கைம்பெண் என்ற வகையில் காலஞ்சென்றவரின் மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்குரிய உரிமைத் தத்துவப் பத்திரங்களைப் பெறுதற்கு உரித்துடையவரென்றும் அவ்வண்ணமே அவருக்கு வழங்கப்படுமென்றும் யாழ். நீதிநிருவாக வலயத்தின் தத்துவப்பத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளை ஆகிய நான் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் செயற்பட்டு இத்தால் கட்டளையிடுகிறேன்.

ஒப்பம்
**கா. கணபதிப்பிள்ளை,**
தத்துவப்பத்திர அதிகாரி.

3-8-76

காரணங்காட்டும் திகதி 31-5-77க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்
**கா. கணபதிப்பிள்ளை,**
தத்துவப்பத்திர அதிகாரி.

1-4-77

காரணம் காட்டும் திகதி 5-7-77க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்
**கா. கணபதிப்பிள்ளை,**
தத்துவப்பத்திர அதிகாரி.

6574

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

4 ம் குறுக்குத் தெருவில் குடியிருப்புப் பகுதியில் கட்டிடம் கட்டக்கூடிய 2 பரப்புக் காணி சுத்தமான உறுதியுடன் விற்பனைக்குண்டு. பிரித்தும் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும். T. அலெக்சாண்டர், C/o D. ஞானப்பிரகாசம், 91 1/1, 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 6563

## சிறுபான்மை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலை கடந்த 20 வருடங்களாக எதுவித கட்டட வசதியுமில்லாமல் இருந்துவருகிறது. ஏழைப் பிள்ளைகளுக்கு வாங்கு மேசைகூட வழங்கப்படவில்லை. இதைத்தான் தேசிய கல்வித் திட்டமெனக் கூறி அரசு பெருமைப்படுகின்றது.

புதிய தேசிய கல்வித்திட்டம் மக்களை ஏமாற்றும் ஒருவெள்ளைப் பூச்சாகும். இத்திட்டத்தினுல் நாட்டில் எதிர்காலத்தில் 80வீதமானவர்கள் வீதியில் அலைய நேரிடும்.

"சிறுபான்மையினர் பிரச்னை தீர்க்கப்படாமல் இருப்பதினுல் தான் தமிழ் பேசும் மக்கள் கூட்டணிக்கு ஆதரவாக இருக்கிறுர்கள். சிறுபான்மையினரின் பிரச்னைகளைத் தீர்க்காமல் தட்டிக்கழித்துவருவதால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும். தமிழ் இளைஞர் விரக்தியடைந்த நிலையில் இருக்கிறுர்கள் அவர்கள் பிரச்னை தீர்க்கப்படாவிடில் பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம் இதற்கு அரசுதான் பொறுப்பாக இருக்கும்.

சகல அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படவேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் போராடி வருகின்றது. அதை ஆசிரியர்சங்கம் தனித்து செய்யமுடியாது தொழிலாளர் வர்க்கத்துடன் இணைந்து போராடவேண்டும். அரசியல் கைதிகள் இல்லை என்று கூறி வந்த நிதிஅமைச்சின் காரிய தரிசி கடந்தகிழமை கைதிகள் மேற்கொண்ட உண்ணுவிரதத்தின்பின் ஒருவகையானவிசேட குற்றவாளிகள் எனக் கூறியுள்ளார். அரசியல் கைதிகள் பெரும்பான்மையினராக இருந்தாலும் சரி, சிறுபான்மையினராக இருந்தாலும் சரி, நாம் அவர்களை விடுதலை செய்ய போராடுவோம்.

வடமாநிலக் கல்வி அதிகாரி திரு சிவநாதன் கூறியதாவது 'சிங்கள தமிழ் மக்களின் பிரச்னைகள் விரைவில் தீரும் சூழ்நிலை ஏற்பட்டுவருகிறது. இம்மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறுவது தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டுவதாக இருக்கும். இந்த ஒற்றுமை மேலும் நீடிக்கவேண்டும்'

சங்க உபதலைவர் திரு. த. சண்முகநாதன்பேசும்போது கடந்தகாலத்தில் ஆசிரியர்கள் உரிமைகள் தெளிவான கருத்துடன் போராட்டம் நடத்தியமையால் கடந்த ஒரு வருடத்தில் 7000 புதிய உறுப்பினர்கள் சேர்த்துள்ளார்கள்" என்றுர்.

(7-ம் பக்கம் பார்க்க)

## புத்தளத்தில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய அங்கு சென்றுள்ளனர்.

இவர்கள் அங்குநான்குதினங்கள் தங்கியிருப்பர்.

உடுப்பிட்டித் தொகுதிக்கும் இவர்கள் சென்று த. வி. கூட்டணி வேட்பாளருக்கு ஆதரவாக பிரசாரம் செய்யவுள்ளனர். (ம-உ)


## தீப்பெட்டி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கீட்டு அட்டைக்கும் 6தீப்பெட்டிகள் வழங்க ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் இம்மாதம் கூடுதலான பொருட்களை கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கவிருக்கிறது.

# கிளிநொச்சி புதிய நகரமண்டபம், வரவேற்புக்கூடம், மத்திய சந்தை



## திறப்பு விழாச் சிறப்பிதழ்

கிளிநொச்சி புதிய நகர மண்டபம், வரவேற்புக் கூடத்தின் தோற்றம்

தபால் தந்தி, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர்

## ஆசிச் செய்தி!



[மாண்புமிகு திரு. செல்லையா குமாரசூரியர் - தபால் தந்தித் தொலைபேசித் தொடர்புகள் அமைச்சர், வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர்]

1977-ம் ஆண்டு யூலை மாதம் 2ம் திகதி மாண்புமிகு பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் கிளிநொச்சி நகர மத்திய அபிவிருத்தித் திட்டக் கட்டிடத்தை திறந்து வைப்பதையொட்டி மாண்புமிகு தபால் தந்தித் தொடர்புகள் அமைச்சரும், வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சருமாகிய திரு. செல்லையா குமாரசூரியர் விடுத்த ஆசிச்செய்தி:-

கிளிநொச்சி சகல வசதிகளும் படைத்த நவீன நகரமாக மாறுவதற்கு அத்தியாவசியமாக வேண்டிய நகரமண்டபம், நவீன சந்தை முதலியன பூர்த்தியடைந்ததையிட்டு நாம் அனைவரும் மகிழ்வெய்துகின்றோம். யாழ்மாவட்டத்தில் மிகப் பெரியதும், அதிக முக்கியத்துவம் வாய்ந்ததுமான கிளிநொச்சித் தொகுதி வளர்ந்து பூரணமுறுவதால்தான், குறிப்பாக இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்களின் நிலையில் பரவலாக பொருளாதாரம் செழிப்படையும்.

குறுகிய ஆறுமாத காலத்திற்குள் இந்தப்பாரிய திட்டங்களைத் தீட்டிச் செய்து முடித்தமைக்கு எமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் பட்டணசபையின் சகல நிர்வாகஸ்தர்களுக்கும், உத்தியோகத்தர்களுக்கும், விசேட

[6ம் பக்கம் பார்க்க]

விசேட ஆணையாளர்

## ஆசிச் செய்தி!



[பி.எல் பேட்டிசில்வா அவர்கள் விசேட ஆணையாளர் கிளிநொச்சிப் பட்டணம்]

1977ம் ஆண்டு ஜூலை மாதம் 2ம் திகதி கௌரவ பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவரின் விஜயம் குறித்து கிளிநொச்சிப் பட்டண விசேட ஆணையாளர் திரு. பி. எல். பேட்டி சில்வா, அவர்களால் வெளியிடப்பட்ட ஆசிச்செய்தி:-

யாழ். குடாநாட்டில் பலஇன மக்கள் வதியும் கிளிநொச்சி நகர விசேட ஆணையாளராக கடமையாற்றும் பொறுப்பை 17-5-76லிருந்து அரசு என்மீது சுமத்தியுள்ளது. இக்கடமை புரிவதில் யான் பெருமிதமும், மகிழ்ச்சியும்

(6-ம் பக்கம் பார்க்க)

கட்டிட ஒப்பந்தகாரர் 'மனோகரன் அன்ட் வெற்றிவேல்' ஸ்தாபனத்தாரின் நிர்வாக இயக்குநர்கள் விடுத்த

## ஆசிச் செய்தி!



இ. வெற்றிவேலு அவர்கள்
நிர்வாக இயக்குநர்
மனோகரன் அன்ட் வெற்றிவேல்



எஸ்.கே.மனோகரபூபன் அவர்கள்
நிர்வாக இயக்குநர்
மனோகரன் அன்ட் வெற்றிவேல்

மாண்புமிகு பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்களால் இன்று காலை திறந்து வைக்கப்படும் கிளிநொச்சி பட்டணசபையின் புதிய நகர மண்டபம் வரவேற்புக்கூடம் மத்தியசந்தைக் கட்டிடங்களை நாம் பன்னிரண்டு லட்சம் ரூபா செலவில் மிகக் குறுகிய ஆறுமாதகாலத்திற்குள் நிர்மானித்துக் கொடுத்திருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம்.

இக்கட்டிடங்கள் கிளிநொச்சிப் பட்டண மக்களுக்கு மிக மிக உபயோகமானதாக அமைந்திருப்பதுடன் கிளிநொச்சிப் பட்டணத்திற்கே ஓர் பெருமையும் கம்பீரமான தோற்றத்தையும் கொடுக்கிறதென்பதை யாவரும் அறிவர்.

இக்கட்டிடங்களை நிர்மானித்துக்கொடுக்கும் ஒப்பந்தத்தை சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் நாம் பொறுப்பேற்று வேலைகளைத் தொடங்கினோம். தொடங்கிய முதல் இரண்டு மாதங்களிலும் பெய்த கடும் மழையினால் வேலைகளின் முன்னேற்றம் பாதிக்கப்பட்டது. தொடர்ந்தும் ஏற்பட்ட பல இடையூறுகளையும் சமாளித்துக் குறிப்பிட்ட காலத்திற்குள்ளேயே முழுவேலைகளையும் கிளிநொச்சிப்பட்டண விசேட ஆணையாளரினது திருப்திக்கமையப் பூர்த்திசெய்துள்ளோம்.

இவ்வேலைகளை திருப்திகரமாக முடித்து குறிப்பிட்ட காலத்திற்குள் கையளிப்பதற்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பை நல்கிய கிளிநொச்சிப் பட்டண விசேட ஆணையாளர் திரு. பி.எல். பேட்டி சில்வா அவர்களுக்கும் அவரது சக ஊழியர்களுக்கும் மற்றும் யாழ். அரசாங்க அதிபர் டபிள்யூ. ஏ எல். விஜயபாலா

(6ம் பக்கம் பார்க்க)

கிளிநொச்சி நகர மண்டபம், வரவேற்புக் கூடம் மத்திய சந்தை முதலியவற்றை மிகத் துரிதமாக முடித்தமைக்கு மனோகரன் அன்ட் வெற்றிவேல் ஸ்தாபனத்தாருக்கு எமது நல்வாழ்த்துக்கள்

ஸ்ரான்லி ஹவுஸ்
பிரபல பெயின்ட், இரும்பு வியாபாரிகள்
ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்
போன்: 235

மனோகரன் அன்ட் வெற்றிவேல் ஸ்தாபனத்தாருக்கு எமது நல்வாழ்த்துக்கள்

என். வைத்திலிங்கம் அன்ட் கம்பனி
பிரபல இரும்பு வியாபாரிகள்
450, பழைய சோனக தெரு. கொழும்பு-12 போன்: 33143
45, கே. கே. எஸ், ரோட். யாழ்ப்பாணம் போன்: 530

மனோகரன் அன்ட் வெற்றிவேல் ஸ்தாபனத்தாருக்கு எமது நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக

ஐவ்ரு எலெக்றிக்கல்ஸ்
பிரபல மின்சார ஒப்பந்தகாரரும் விற்பனையாளரும்
6, ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்

**மணிவாக்கு**

உழைக்காமல் உண்டுகொண்டிருப்பவன் பிறரிடமிருந்து களவாடப்பட்ட உணவையே உண்கிறான்.

—மகாத்மாகாந்தி

ஈழநாடு
THE EELANAADU

# பொலிஸ் சேவை

இலங்கைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் சங்கம் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகாவுக்கு ஒரு மகஜரை அனுப்பிவைத்துள்ளது.

பொலிஸ் சேவையில் பதவி உயர்வுகள், இடமாற்றங்கள், ஒழுங்கு நடவடிக்கை விசாரணைகள், தண்டனைகள், சேவைக்கு ஆட்களைத் திரட்டுதல் போன்ற முழுப்பொறுப்பும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலிடமே முற்றுகவிடப்படவேண்டும் என்று அந்த மகஜரில் கேட்கப்பட்டிருக்கிறது.

பொலிஸ் சேவையில் அரசியல் தலையீடு அதன் திறமைக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதென்றும்தெரிவிக்கும் மகஜர் பொதுத் தேர்தலை முன்னிட்டு உதவிப்பொலிஸ் சுப்ரீண்டென்ட்களாக இருபத்தியொரு பேர் நியமிக்கப்பட்டது குறித்தும் சுட்டிக்காட்டியுள்ளது.

பலதடவைகளில் பிரதமரைச் சந்தித்துப்பேசுவதற்கு சங்கம் எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லையென்றும் அந்த மகஜரில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் சங்கம் பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் இது.

இதேசமயம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன பாரபட்சமின்றித் தங்கள் கடமையைச் செய்யும் பொலிசாரைத் துன்புறுத்த வேண்டாமென்றும் சமீப காலத்தில் பாரபட்சமற்ற முறையில் தமது கடமைகளைச் செய்த சில அப்பாவிப் பொலிசார் திடீர் இடமாற்றத்துக்குள்ளானதன் மூலம் அரசாங்கத்தால் தண்டிக்கப்பட்டுள்ளனர் என்றும் கூறியிருக்கிறார்.

பொலிஸ் சேவை பொதுமக்களுக்குப் பாதுகாப்பளிக்கும் சேவை. நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் கடமை இதனுடையது.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொறுப்பையுடைய பொலிசாரின் கண்களுக்கு எல்லோரும் சமமாகவே தோன்றவேண்டும்.

குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் யாராயிருந்தாலும் அவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தித் தண்டனை பெற்றுக்கொடுக்கும் பொறுப்பும் இவர்களுக்குரியது.

ஆட்சிபீடத்தில் எந்தக் கட்சி அமர்ந்திருந்தாலும் அரசாங்கத்துக்கு விசுவாசமாக இருக்கவேண்டியது பொலிசாரின் கடமையுமாகும்.

ஆனல் எந்தக் கட்சியையும் அவர்கள் ஆதரிக்கக்கூடாது. எந்தக்கட்சியையும் அல்லது எந்த ஒரு வேட்பாளருக்காக அவர்கள் சலுகைகாட்டக்கூடாது.

பாரபட்சமின்றி தமது கடமையை பொலிசார் செய்யவேண்டும். இதற்கு ஆட்சிபீடத்திலிருக்கும் அரசாங்கம், பொலிஸ் சேவையில் எந்தவித அரசியல் தலையீட்டுக்கும் இடமில்லாத வகையில் நடந்துகொள்வது அவசியம்.

ஆசிரியர்கள், அரசாங்க ஊழியர்களுக்கு அரசியல் உரிமை வழங்கப்பட்டுள்ளது. ஆனல் பொலிஸ் படைக்கு இந்த உரிமை வழங்கப்படவில்லை.

இது ஒன்றே பொலிசார் எந்தக்கட்சிக்கோ எந்த வேட்பாளருக்கோ சாதகமாகவோ பாதகமாகவோ நடந்துகொள்ளாமலிருக்க வேண்டுமென்பதற்குச் சான்று.

சமீபத்தில் சில இடங்களில் சில பொலிசார் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டனர். இதற்கு ஆட்சேபம் தெரிவிக்குமுகமாக பொலிஸார் பலர் "சுகயீன லீவு" எடுத்தனர்.

பொலிஸ் சேவையிலுள்ளவர்கள் இப்படிச் சுகயீன லீவு எடுத்துத் தமது ஆட்சேபனையைத் தெரிவிக்கத் தொடங்கியிருப்பது இனி வேறு வழிகளிலும் இது பரவுவதற்கு வழிவகுக்கக் கூடும்.

பொலிஸ் சேவையில் அரசியல் தலையீடு நீங்கி பாரபட்சமற்றசேவைக்கு உடனடியாக மார்க்கம் காணப்படவேண்டும். பொலிசார் எங்கு சேவையாற்றினலும் வடக்கிலும்சரி, தெற்கிலும் சரி, கிழக்கிலும் சரி, மேற்கிலும் அவர்களுடைய கடமையை எந்தவிதவிருப்பு வெறுப்புகளுக்கும் இடமில்லாதவகையில் செய்வதற்கு வழிகாணப் படவேண்டியது அவசியம். ஜனநாயகத்துக்கும் இது முக்கியம்.

"கலாயோகிதினம்:

# தேசிய ரீதியில் கொண்டாட வேண்டும்"

— ச. அம்பிகைபாகன்

யாழ்ப்பாணம், சனி

"'கலாயோகி ஆனந்தகுமாரசுவாமியின் நூற்றுண்டு விழா அண்மித்துவரும்வேளையில்அவரது குடும்பம் பற்றிய ஆய்வுக் கட்டுரையை திரு. அம்பிகைபாகன் வெளியிடுவது சாலப் பொருத்தமானது ஒருவருடைய சாதனைகளை மதிப்பீடு செய்கையில் அவரது குடும்பச் சூழ்நிலைபற்றி ஆராய்வது அவரது சாதனையின் பேறுகளைச் சிறப்பான முறையில் மதிப்பீடு செய்வதற்குப் பெரிதும் உதவும். இவ்வரிய பணியை திரு.அம்பிகைபாகன் தமது ஆய்வுக் கட்டுரைமூலம் தொடக்கிவைத்துள்ளார்.''

யாழ். வளாக செனட் கட்டடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 'தென்னுசியவியல்' கருத்தரங்கிற்குத் தலைமைவகித்துப் பேசிய இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் க.கைலாசநாதக் குருக்கள் கூறினர். இக் கருத்தரங்கில் 'கலாயோகி ஆனந்தகுமாரசுவாமியின் மூதாதையர்கள்' என்னும் பொருள் பற்றிய கட்டுரையை வண்ணை வைத்தீசுவரக் கல்லூரியின் முன்னுள் அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் சமர்ப்பித்து வாசித்தார்.

கலாநிதி க கைலாசநாதக் குருக்கள் தொடர்ந்து பேசுகையில், "ஈழத்தில் தமிழுக்கும் சைவத்திற்கும் அளப்பரிய முறையில் சேவையாற்றி வரும் திரு. அம்பிகைபாகன், கலாயோகி ஆனந்தகுமாரசுவாமியின் வாழ்க்கைபற்றிய ஆய்வினைத்தெளிவாக நடாத்த வசதியாக அன்னரது குடும்பம் பற்றிய ஆய்வுக் கட்டுரையை வெளியிட்டுள்ளார்" எனக் கூறினர்.

ஆய்வுக் கட்டுரையை வாசித்த திரு. அம்பிகைபாகன் தனது உரையில் குறிப்பிட்டதாவது:

### தேசிய ரீதியில் கொண்டாட வேண்டும்

"கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி சைவசித்தாந்த தத்துவத்துறையில் அளப்பரிய பணி ஆற்றி உள்ள போதிலும் அவரது நூல்கள் ஒன்று கூட இதுவரை தமிழில் மொழிபெயர்க்கப் படாதது வேதனைக்குரியது. அன்னரின் நூற்றுண்டு விழா பிறந்ததினமாகிய ஆவணி 22ம் நாளில் தேசிய ரீதியில் அவரது தினத்தைக் கொண்டாட முற்படாதது கவலைக்குரியது. இனியேனும் தேசியரீதியில் அன்னரின் நூற்றுண்டு விழாவைக் கொண்டாட ஏற்பாடுகள் செய்வது நல்லது.

"ஒருவருடைய தனிப்பட்ட வாழ்வின் சாதனைகளை அளவிடுகையில் அவரது குடும்ப சூழ்நிலை, பாரம்பரியம் ஆகியனவை மிக்முக்கிய பங்கு வகிப்பதைக்காணலாம். கலாயோகி ஆனந்தகுமாரசுவாமியின் சாதனைகளை நோக்குகையில் அவரது தந்தையின் சுவடுகளை அவர்பின்பற்றிஉள்ளதை தெளிவாக காணலாம் எனவே ஆனந்தகுமாரசுவாமியின் தந்தை முத்துக்குமாரசுவாமி பற்றிய ஆய்வு கலாயோகியின் சாதனைகளைத் தெளிவாகப் புரிந்துகொள்ள மிகமிக அவசியமாகின்றது.

### தந்தை முத்துக்குமாரசுவாமி

முத்துக்குமாரசுவாமி 1834ம் ஆண்டு ஜனவரி 23ம் திகதி கொழும்பு முகத்துவாரத்தில் காசிச்செட்டி வம்சத்தில் தோன்றினர் இவர் கல்வி கற்ற கொழும்பு அகடமியின் மிகச்சிறந்த மாணவர்க்கான பரிசான 'ரேனர்' பரிசு இவரின் முதன்மைகருதி இருக்கு வழங்கப்பட்டது. இவருக்குப் பின்னர் இவர் குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பொன்னம்பலம் அருணசலம், அருணசலம் மகாதேவா, மகாதேவா பாலகுமார் ஆகியோர் இப் பரிசைப் பெற்றனர். இவர் புத்தரின் தத்துவங்களை 'சுத்தநிபாதம்' என்ற பெயரில் நூலாக வெளியிட்டுள்ளார். மகன் கலாயோகியும் தந்தையின் வழியைப் பின்பற்றி 'புத்தரும் புத்தரின் போதனைகளும்' 'இந்து சமயமும் புத்த சமயமும்' போன்ற பல நூல்களை வெளியிட்டுள்ளார்.

இவரே முதன் முதலில் கிறிஸ்தவர் அல்லது யூதரே பரிஸ்டர் பட்டம் பெறலாம் என்ற முறையை முறியடித்தவராவர். மேலும், பரிஸ்டராக இந்த காலத்தில் பைபிளைக் கொண்டு சத்தியம் செய்யும் வழக்கம் இருந்த வேளையில் சென்னையில் கிறிஸ்தவர் அல்லாதவர் சாதாரண சத்தியம் செய்தால் போதும் என்று நிலைநாட்டினர். இவரிடத்தில் காணப்பட்ட இத் தமிழ்ப்பற்றையும் சைவ உணர்வையும் கலாயோகி இடத்திலும் நாம் காணலாம்". (கி.அ)

"ஆஸ்பத்திரியைத் திறக்க நடவடிக்கை எடுங்கள்"

## வட்டு. ஊர்மன்றம் கோரிக்கை

சித்தன்கேணி, வெள்ளி

"நீண்ட நாட்களாக நடைபெற்றுவரும் அரசாங்க உதவி வைத்திய அதிகாரிகளின் வேலை நிறுத்தம் காரணமாக, வட்டுக்கோட்டை மருந்தகமும மூடப்பட்டுள்ளது. இதனல் இப் பகுதி மக்கள் பெரிதும் கஷ்டப்பட்டு வருகிறார்கள். ஆகவே, மக்களின துயர் துடைக்க நடவடிக்கை எடுங்கள்".

இவ்வாறு சுகாதார அமைச்சரைக் கோரும் தீர்மானம் ஒன்று வட்டுக்கோட்டை ஊர் மன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்தில் விபரம் வருமாறு:

"வட்டுக்கோட்டைஅரசினர் மருந்தகம நாட்டில் உள்ள அரசாங்க உதவி வைத்திய அதிகாரிகள் சங்கம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதனல் மிகவும் நீண்ட நாட்களாகப் பூட்டப்பட்டிருக்கிறது. இதனல் மருந்து பெறமுடியாமல், இக்கிராம எல்லைக்குள் வசிக்கும்மக்கள் மக்கள் படும் துயரம் மிகவும் பெரியது. இதனல் அல்லல் படும் மக்கள் துயரை அகற்றவும், நாட்டில் நடைபெறும் இவ் வேலைநிறுத்தத்தை ஒரு சுமுகமான சூழ்நிலையில் தீர்த்து வட்டுக்கோட்டை அரசினர் மருந்தகம் மாத்திரமல்லாமல், நாட்டிலுள்ள அனைத்து அரசினர் மருந்தகங்களும், சரட்டிந்கு நற்பணி புரிந்து. மக்கள் துயர்துடைக்க, ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும".

இத்தீர்மானத்தின் பிரதி ஒன்று பிரதம மந்திரிக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

எம். பி. யாவது எப்படி?

# தேர்தல் அதிகாரி கடமை

### போட்டியில்லாத தேர்தல் (பிரிவு 34)

குறிப்பிட்ட தேர்தற் தொகுதிக்கு எத்தனை உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டுமோ அத்தனை பேர் அல்லது பேர்கள் மட்டுமே நியமனத் தேதியன்று காலை பத்துமணிக்கும் பதினெருமணிக்கும்இடையில் பெயர் குறித்து நியமிக்கப்பட்டிருப்பின், தேர்தற் பொறுப்புத்தியோகத்தர் நியமிக்கப்பட்ட அந்த வேட்பாளர் அல்லது வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என்று வெளிப்படுத்துதல் வேண்டும் என்று 34ஆம்பிரிவு கூறுகின்றது. இதை இன்னமும் இலகுவாக்கிச் சொன்னல்

### சட்டமும் சமுதாயமும்

பருத்தித்துறை, மானிப்பாய் போன்ற தொகுதிகளில், ஒரு வேட்பாளரின் நியமனப்பத்திரம் மட்டுமே சமர்ப்பிக்கப்பட்டால் அந்த வேட்பாளர் அந்தத்தொகுதிக்கு உறுப்பினராகத் தெர்ந்தெடுககப்பட்டுள்ளார் என்று தேர்தற் பொறுப்புத்தியோகத்தர் வெளிப்படுத்துதல்வேண்டும். பலபேர் நியமனப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கவந்து, ஒருவரது நியமனப்பத்திரம் தவிர ஏனையவரது நியமனப்பத்திரங்கள் நிராகரிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களிலும், ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமனப்பத்திரத்துக்குரியவரே, அத்தொகுதிக்கு பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என வெளிப்படுத்தப் படுவார்.

இரண்டு அல்லது மூன்று உறுப்பினர்களைக் கொண்ட தொகுதிகள் தொடர்பிலும் பின்பற்றப்படும் நெறிமுறை இதுவே.

குறிப்பிட்ட வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என அங்கு நியமன இடத்தில் சமுகம் தந்திருக்கும் வேட்பாளர், மூன்மொழிபவர், வழிமொழிபவர், முதலியோருக்கு பகிரங்கமாக அறிவித்தபிறகு, தேர்தற் பொறுப்புத்தியோகத்தர் பின்வரும்முறையிலமைந்த ஓர் ஆவணத்தைத் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைப்பார்:

"வேறெந்த வேட்பாளரும் அல்லது வேட்பாளர்களும் பெயர்குறித்து நியமிக்கப் பெருமையால்/ மற்றவேட்பாளர் அல்லது ஏனைய வேட்பாளர்கள் தமது வேட்பாண்மையைக் கைவாங்கிவிட்டமையால் ... என்ற முகவரியில் உள்ள ஆன ஆவன்ன என்பவரே/ கானக்காவன்ன, கீனக் கியன்ன என்பவர்களே...... என்ற தேர்தற்றெகுதிக்குரிய பாராளுமன்ற உறுப்பினராக/ பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்று/ தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என்று இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

1977ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6ஆம் நாளாகிய இன்று யாழ்ப்பாணத்தில் தேதியிடப்பட்டது.

பாண்டியன் நெடுமாறன்

..........................

தேர்தற் பொறுப்புத்தியோகத்தர்

1977-6-6.

இப்படியான ஒரு அத்தாட்சிப் பத்திரத்தைத் தேர்தல் ஆணையாளர்பெற்றதும், அவர் மேற்சொன்னவாறு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரின் பெயரை அல்லது உறுப்பினர்களின் பெயர்களை கசற்றில் வெளியிடுவித்தல் வேண்டும். [பிரிவு.34 (அ)].

### போட்டி உள்ள தேர்தல் (பிரிவு35) (பிரிவு35(2))

—செ.சிறீக்கந்தராசா—
(சட்டத்தரணி)

குறிப்பிட்ட தேர்தற்றெகுதிக்கு எத்தனை உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டுமோ அத்தனை பேருக்கு அல்லது அத்தனை பேர்களுக்கு கூடுதலான ஆட்கள் பெயர் குறித்து நியமிக்கப்பட்டிருப்பின், அந்தத் தொகுதிக்கான தேர்தல் சனதிபதியின் பிரகடனத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று நடைபெறும். இதனைத் தேர்தற் பொறுப்புத்தியோகத்தர் நியமன இடத்தில் சமூகமாயிருப்போரிடம் கூறுவார். இதன் பின்னர் வேட்பாளர்களுக்குரிய, அதாவது சுயேச்சை வேட்பாளர்களுக்குரிய சின்னம் பற்றிய பிரச்னை சீர்தூக்கிப் பார்க்கப்படும். சின்னம் பற்றிய விபரங்களை இதனை அடுத்துவரும் பக்கங்களில் படிப்போம். நியமனநாளன்று பிற்பகல் 1மணியளவில் வேட்பாளர் முதலியோர் கலைந்து விடுவர்.

வேட்பாளரும் சகாக்களும் கலைந்துவிட்டாலும், தேர்தற் பொறுப்புத்தியோகத்தரது கடமை முடிந்துவிடாது. அன்றைய தினம் பிற்பகல் நான்கு மணிக்குப்பின்னர் தேர்தல் பொறுப்புத்தியோகத்தர்ஆணையாளரோடுதொடர்புகொண்டு அந்தத் தேர்தல் போட்டியுள்ள தேர்தலாக அமையப் போகின்றது என்று அறிவிப்பார். அத்துடன், சமர்ப்பிககப்பட்ட நியமனப்பத்திரங்கள் ஒவ்வொரு வேட்பாளருக்கும் குறித்தொதுக்கப்பட்ட சின்னம் பற்றிய கூற்று, இரண்டு அல்லது மூன்று நியமனப் பத்

(8ம் பக்கம் பார்க்க)

# "மக்களுக்காக எதையும் இழக்கத்தயார்"

## அண்ணாசிலை அருகில் தமிழக முதல்வர்

சென்னை, ஜூலை 1

'நிர்வாகத்திலும்நீதிமன்றத்திலும்தலையிடாதஅரசுஒன்றை அமைப்பதே அண்ணாதிந்திய அண்ணா திராவிடமுன்னேற்றக் கழகத்தின் நோக்கமாகும்.'

இவ்வாறு தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் கூறினார்.

நேற்றுமுதல்வராகப் பதவி ஏற்றபின்னர், அண்ணாசாலைக் குச்சென்ற எம். ஜி. ஆர். அண்ணாசிலைக்கு அருகே தம் மைக்காத்து நின்ற பெருந் திரளான மக்கள் மத்தியில் உரையாற்றினார்.

'மக்கள் எமக்குஅளித்த சீரிய பணியை நிறைவேற்றவேண்டியது எமது தலையாய கடன். எமது அரசு இந்தக்கடமையிலிருந்து துளியளவேனும் விலக மாட்டாது' என்றும் தெரிவித்த திரு. எம். ஜி. ஆர். தாமும் தமது கட்சியினரும் மக்களுக்காக எதையும் இழக்கத்தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார். (இ)



வேலர்: ஒருதருக்கு இரண்டு கல்வெட்டு அடித்திருக்கினம்

மயிலர்: ஏன்?

வேலர்: அண்ணன் தம்பிக்குள் கட்சிச் சண்டையானபடியால் புறிம்பு புறிம்பாக அந்திருட்டி செய்தவை. கல்வெட்டில் ஒருதரை ஒருதர் ஒரே வசைமாரி

மணியம்: தகப்பனுக்கு ஒற்றுமையாக கல்லு போடுறதுக்குப் பதிலாக ஒருதருக்கொருதர் கல்லடிக்கினம்.

— சுந்தர்

### இந்திய ஜனதிபதி தெரிவு:

# ஜெகஜீவன் விஜயலக்ஷ்மி பண்டிட் உட்பட ஐவர் போட்டியிடுவர்?

## ஏகமனதானதெரிவுக்குபிரதமர்முயற்சி

புதுடில்லி, ஜூலை 1

பாரத ஜனதிபதி பதவிக்குத் தாம் போட்டியிடப்போவதில்லை என்று லோகசபை சபாநாயகர் திரு. சஞ்சீவரெட்டி அறிவித்துள்ளார்.

இப்பதவிக்குப்பாரதப் பாதுகாப்பு அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராம், காலஞ்சென்ற பிரதமர் ஜவஹர்லால் நேருவின் சகோதரியான திருமதி விஜயலக்ஷ்மி பண்டிட், காங்கிரஸ் பிரமுகர் நிஜலிங்கப்பா உட்பட இளைப்பாறிய சுப்ரீம் கோட் நீதிபதிகள் இருவரும் போட்டியிடுவர் என அறியப்படுகிறது.

ஆகஸ்ட் மாதம் 6-ம் திகதி பாரத ஜனதிபதி தெரிவு நடைபெறவிருக்கிறது.

ஜனதிபதி ஜனாப் பக்ருதீன் அலி அகமத் காலமானதையடுத்து இப்பதவி காலியாகியது.

பதில் ஜனதிபதியாக திரு. ஜட்டி கடமையாற்றிவருகிறார்.

### ஏகமனதானதெரிவுக்கு மொரார்ஜி முயற்சி

ஜனதிபதி தெரிவு ஏகமனதாக நடைபெறவேண்டும் என்று பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் காங்கிரஸ் எதிர்க்கட்சித்தலைவர் திரு. சவான் உட்பட ஏனைய தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திவருகிறார். (உ)

# வெற்றிபெற்றால் விஸ்வகுல மக்களுக்கு தொழிற்பேட்டை

## ராஜராஜேஸ்வரன் உறுதி

யாழ்ப்பாணம், சனி

"நான் நல்லூர்த் தொகுதி பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டால், விஸ்வகுல மக்களுக்கு திருநெல்வேலியில் ஒரு தொழிற்பேட்டை அமைத்துத்தர நடவடிக்கைகளை மேற்கொள்வேன்." இவ்வாறு வண்ணார் பண்ணை கேசாவில் பிள்ளையார் கோயிலடியில் நடைபெற்ற கருத்தரங்கில் நல்லூர்த் தொகுதி சுயேச்சை வேட்பாளர் திரு. ராஜ ராஜேஸ்வரன். தங்கராசா கூறினார்.

திரு. இறைபுகழ் வாழி தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் ஏராளமான இளைஞர்கள் கலந்துகொண்டார்கள். திரு. தங்கராசா மேலும் பேசுகையில் கூறிய

[7ம் பக்கம் பார்க்க]

# நீரைப் பயன்படுத்துவதில் சீன புதிய முறை

பீக்கிங், ஜூலை 1.

சீன பயிர்களுக்கு நீரைப் பாய்ச்சுவதற்குப் பதிலாக நீரைத்தெளிக்கும் முறையைக் கையாண்டுவருகிறது.

இதுபற்றி நடத்தப்பட்ட பரீட்சார்த்தத்தின் மூலம் நீரைத் தெளிப்பதன்மூலம் அரைப்பங்கு நீரைமீதப்படுத்த முடிவதுடன் சாகுபடியும் அதிகரிக்கக்கூடியதாக இருக்கிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ)

# "கல்லூரி உருவாகி சில வருடங்களில் சிறப்புற்றது"

சாவகச்சேரி, வெள்ளி.

"இக்கல்லூரி 1878ல் ஆரம்பிக்கப்பட்டு சிலவருடங்களுள்ளே ஆங்கிலக்கல்வி போதிப்பதில் மிகத்திறமையுடன் விளங்கியது."

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பழைய மாணவர் இராப்போசன விருந்துபசாரத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்புரை நிகழ்த்திய தெல்லிப்பழை யூனியன் கல்லூரி முன்னாள் அதிபரும் சமாதான நீதிபதியுமான திரு. ஐ. பி. துரைரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. க; பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இராப்போசன விருந்தில் திரு. துரைரத்தினம் மேலும் பேசும்போது கூறியதாவது: "1876ம் ஆண்டில் அமெரிக்க பாதிரிமாரால் ஸ்தாபிக்கப்பட்டபோது இது ஒரு சாதாரண அங்கில வித்தியாசாலையாகவே இருந்தது. அப்போதே இவ் வித்தியாசாலை ஆங்கிலக் கல்வியே போதிப்பதில் திறமையடைந்திருந்தது. அக்காலமிருந்த வண ஜே. கே. சின்னத்தம்பிபோதகர் அவரின் வழித்தோன்றல்கள், உறவினர்களால் நன்காதரவு கொடுக்கப்பட்டு வளர்ந்து வந்த கல்லூரி யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்த முன்னாள் அதிபர் திரு. கே. எஸ். சரவணமுத்து இங்கு அதிபராக வந்து கடமையேற்றபின் இன்று கல்விப் போதனையில் உயர்ச்சியடைந்து அதிகமாணவர்களையும் ஆசிரியர்களையும் கொண்டு வடபகுதியில் சிறந்த கல்லூரியாக உயர்வடைந்துள்ளது என்றார்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் திரு. பூ. வெற்றிவேலு பேசும்போது, அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் அமெரிக்க பாதிரிமார் செய்த கல்வித் தொண்டால்தான் இன்று வடபகுதியில் கல்வி வளர்ச்சியுற்றது என்றார்

கல்லூரி அதிபர் திரு. கே பாலச்சந்திரன், வட்டுக்கோட்டை யாழ். கல்லூரி அதிபர் திரு இராஜன் கதிர்காமர், சட்டத்தரணி செ. அம்பிகைபாலன், மகாஜனக்கல்லூரி அதிபர், திருமதி ப, சிவசங்கரம், ஓவசியர் எஸ். எஸ் முத்தையா, திரு. பொ. தேவேந்திரன் என்போர் உரையாற்றினர். (க)

### மத்திய கிழக்கு நெருக்கடி:

# எந்தவித சமரஸத்திட்டமும் அமெரிக்காவிடம் கிடையாது

## ஜனதிபதி கார்ட்டர் அறிவிப்பு

வாஷிங்டன், ஜூலை 1

மத்திய கிழக்குப் பிரச்னை தொடர்பாக அமெரிக்காவிடம் எந்தவிதமான சமரசத்திட்டமும் கிடையாது என்று அமெரிக்க ஜனதிபதி திரு. ஜிம்மிகார்ட்டர் தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் திரு. கார்ட்டர் மேற்கண்டவாறு கூறினார்.

குண்டுவீச்சு விமானங்களை அமெரிக்கா மேலும் தயாரிக்காது என்றும் தற்போது உள்ளவையே பயன்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

### சோவியத் ஜனதிபதியுடன்சந்திப்பு

இவ்வருடமுடிவுக்குள் சோவியத்யூனியன் ஜனதிபதி திரு. பிரஷ்னேவைச் சந்தித்துத்தாம் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாக கூறிய கார்ட்டர் 'ஒபெக்' நாடுகள் எண்ணெய் விலையை 5 சதவீதம் அதிகரிப்பதில்லை என்று முடிவு எடுத்திருப்பது பற்றி பிரஸ்தாபித்து அடுத்தாண்டும் இதேநிலை நீடிக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார். (உ)

## தமிழக முதல்வருக்கு வாழ்த்து!

யாழ்ப்பாணம், சனி

தமிழகத்தின் முதலமைச்சராக பதவியேற்ற அ. இ. அ. தி. மு. க. பொதுச் செயலாளர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனைப் பாராட்டி தமிழர் கூட்டணிப் பிரமுகர்களும், பொதுநல மன்றங்களும், நடிகர்மன்றங்களும் வாழ்த்துக்கள் அனுப்பியுள்ளன.

யாழ்ப்பாணக் கூட்டணி வேட்பாளர் திரு. வெ. யோகேஸ்வரன் தமது செய்தியில், "ஆறுகோடி தமிழர்களின் அபிலாஷைகளுக்கு மதிப்பளித்து சேவையாற்றும்படி வாழ்த்தியுள்ளார். (கெ)

# மொஸாம்பிக்கிற்கு உதவ முன்வருக ஐ. நா. சபை அங்கத்துவ நாடுகளுக்கு

## பாதுகாப்பு சபை அவசர் வேண்டுகோள்

நியூயோர்க், ஜூலை 1

மொஸாம்பிக்கிற்கு உடனடியாக ஐ.நா. சபையின் சகல அங்கத்துவ பொருளாதார உதவிகள் வழங்கவேண்டும் என்று பாதுகாப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

அடுத்தடுத்து நடைபெறும் றொடீஷியத் தாக்குதல்களில் இருந்து தன்னைப் பாதுகாத்து, தனது பாதுகாப்பை பலப்படுத்திக்கொள்ளும் வகையில் மொஸாம்பிக்கிற்கு சகலநாடுகளும் உடனடியாக உதவவேண்டும் என்று கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றினை ஐக்கிய நாடுகள்சபையின் பொதுச்சபை நிறைவேற்றியிருக்கிறது.

றொடீஷிய ஆக்கிரமிப்பைத் தடுக்க அதிகமான அளவில் இராணுவ உதவிகள் வழங்கப்படவேண்டுமென்று மொஸாம்பிக் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையைக் கேட்டிருந்தது.

மொஸாம்பிக்கிற்குள் றொடீஷிய ஊடுருவல் குறித்து மொஸாம்பிக்கின் நிலைமையைப் பலப்படுத்த வேண்டுமென்று ஆபிரிக்க - மேற்கு நாடுகளும் ஐ. நா. பாதுகாப்புச்சபையைக் கோரியிருந்தன. (உ)

## இன்று

யாழ்ப்பாணம் சனி

வண்ணை வீரமாகாளி அம்மன் பூங்காவனத் திருவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் ஆரம்பமாகும். பூங்காவன விழாவில் பிரபல மேளக்கச்சேரிகளும் கதிர்சுந்தரலிங்கத்தின் பக்திப் பாடல், பற்குணம் வில்லிசை, அருணதழுவினர், சுண்டுக்குளி இராஜன் குழுவினர் முதலியோரின் நிகழ்சிகளும் இடம் பெறும். (அ)

## அம்புஸ் விநியோகம்

நல்லூர், வெள்ளி

விவசாயிகளின் நலன் கருதி வடபகுதி விவசாயப்பயிர்களை அழிக்கும் பச்சை புழுவை அழிக்கக் கூடிய சக்தி வாய்ந்த கிருமிநாசினியான 'அம்புஸ்' மருந்தை யாழ்ப்பாணம் த ரோரு லிமிட்டெட் ஸ்தாபனத்தார் ஆதரவில் கொழும்பு சி ஐ.சி லிமிட்டெட் ஸ்தாபன அதிகாரியான திரு. வி, ஜே பாலசிங்கத்தின் மேற்பார்வையில் வழங்கப்பட்டு வருகின்றது கடந்த 29 ம் திகதி கிளிநொச்சியிலும், 30-ம் திகதி வியாழக்கிழமை விஸ்வமடுவிலும் இம் மருந்து விநியோசிக்கப்பட்டது.

நேற்று வெள்ளிக்கிழமை நீர்வேலியிலும் கோண்டாவிலிலும் விவசாயிகட்கு விவசாய அடையாள அட்டைக்கு நீர்வேலியில் 'அம்புஸ்' கிருமிநாசினி விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. (அ)

யாழ். புற்றுநோய் சிகிச்சைநிலைய ஸ்தாபித நிதிக்காக

# ஈழநாடு

## தேர்தல் 77 போட்டி பிரவேசப்பத்திரம்

## போட்டிக் கேள்விகள்

(1) கீழே தரப்படும் 23 தேர்தல் தொகுதிகளிலும் வெற்றிபெறும் வேட்பாளர்களைக் குறிப்பிடுக:-

| தொ.இல. | தொகுதி | வெற்றி பெறும் வேட்பாளர் |
|---|---|---|
| 79. | ஊர்காவற்றுறை | ................ |
| 80. | வட்டுக்கோட்டை | ................ |
| 81. | காங்கேசன்துறை | ................ |
| 82. | மானிப்பாய் | ................ |
| 83. | கோப்பாய் | ................ |
| 84. | உடுப்பிட்டி | ................ |
| 85. | பருத்தித்துறை | ................ |
| 86. | சாவகச்சேரி | ................ |
| 87. | நல்லூர் | ................ |
| 88. | யாழ்ப்பாணம் | ................ |
| 89. | கிளிநொச்சி | ................ |
| 90. | மன்னார் | ................ |
| 91. | முல்லைத்தீவு | ................ |
| 92. | வவுனியா | ................ |
| 94. | திருகோணமலை | ................ |
| 95. | மூதூர் | ................ |
| 96. | கல்குடா | ................ |
| 97. | மட்டக்களப்பு (1) | ................ |
| | (2) | ................ |
| 98. | பட்டிருப்பு | ................ |
| 100 | சம்மாந்துறை | ................ |
| 101. | கல்முனை | ................ |
| 102. | பொத்துவில் (1) | ................ |
| | (2) | ................ |
| 103. | புத்தளம் | ................ |

(2) மேற்கண்ட 23 தொகுதிகளிலும் மிக அதிக வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் வேட்பாளர் யார்?

| தொ.இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ........ | ........ | ........ |

(3) மேற்கண்ட 23 தொகுதிகளிலும் மிக அதிக பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் வேட்பாளர் யார்?

| தொ.இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ........ | ........ | ........ |

(4) மேற்கூறிய 23 தொகுதிகளிலும் மிகக்குறைந்த பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்படும் வேட்பாளர் யார்?

| தொ.இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ........ | ........ | ........ |

(5) பின்வரும் தொகுதிகளில் வரிசைக் கிரமமாக வரக்கூடிய முதல் மூன்று வேட்பாளர்களையும் குறிப்பிடுக.

| தொ.இல. | தொகுதி | | வேட்பாளர் |
|---|---|---|---|
| 79. | ஊர்காவற்றுறை | 1. | ................ |
| | | 2. | ................ |
| | | 3. | ................ |
| 84. | உடுப்பிட்டி | 1. | ................ |
| | | 2. | ................ |
| | | 3. | ................ |
| 85. | பருத்தித்துறை | 1. | ................ |
| | | 2. | ................ |
| | | 3. | ................ |
| 88. | யாழ்ப்பாணம் | 1. | ................ |
| | | 2. | ................ |
| | | 3. | ................ |
| 97. | மட்டக்களப்பு | 1. | ................ |
| | | 2. | ................ |
| | | 3. | ................ |

தபாற்கட்டளை/காசுக்கட்டளை இல ............ ரூபா ............ இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது 'ஈழநாடு' ஞாயிறு வாரமலர்களிலும், புதன் கிழமைகளில் வரும் 'ஈழநாடு' தினசரியிலும் வெளியிடப்படும் 'ஈழநாடு தேர்தல்-77போட்டி' நிபந்தனைகளுக்கும் அதன்நடுவர் குழு''வின் தீர்மானத்துக்கும்கட்டுப்படுகிறேன் என்று இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

பெயர்: ... ... ... ... ... ... ...

முகவரி: ... ... ... ... ... ... ... ... ...

திகதி ............

கையொப்பம்

குறிப்பு: (1) மட்டக்களப்பும் பொத்துவிலும் இரட்டை அங்கத்தவர் தொகுதிகளானதால் வாக்காளருக்கு இருவாக்குகள் உண்டு. எனவே இத்தொகுதிகளின் வேட்பாளர்களுக்கு கிடைக்கும் வாக்குகளை சரிபாதியாகப் பிரித்துவரும் எண்ணிக்கையையேஇப்போட்டியில் மற்றைய தொகுதிகளுடன்ஒப்பிடுவதற்கு எடுக்கப்படல் வேண்டும்.

குறிப்பு: (2) மட்டக்களப்பு-பொத்துவில் தொகுதிகளில் இப்போட்டிக்கான அதிகப்படி வாக்குகளைக் கணிக்கும் முறை:-

முதலாவது 2வது அங்கத்தவர்களின் அதிகப்படிவாக்குகள்= அவரவர் வாக்குகளின் சரிபாதியிலிருந்து மூன்றுவதாக வந்த வேட்பாளரின் சரிபாதி வாக்குகளைக் கழித்து வரும் தொகைகளாகும். போட்டி முடிவுதிகதி 20-7-1977.

# இட மாற்றத்துக்கு எதிர்ப்பு!

யாழ்ப்பாணம், சனி

யாழ். தபாலகத்தில் கடமையாற்றிய மாற்றுத்தபாலதிபர் திரு.கே. திவாகரமூர்த்தி திடீரென இடமாற்றம் செய்யப்பட்டதை அஞ்சல்தொலைத் தொடர்பு சேவையாளர் சங்கயாழ்கிளை கண்டித்துள்ளது. சங்கசெயலாளர் திரு. எஸ். அருணகிரிநாதனும், தலைவர் திரு. ஈ சுப்பிரமணியமும், சங்கஉறுப்பினர்களுக்கு எழுதியுள்ள கடிதம், ஒன்றில் இது தொடர்பாக சங்கக்கிளை கடந்தமாதம்20ம்திகதிஎடுத்த தீர்மானத்தை சுட்டிக்காட்டியுள்ளது.

திரு. கே. திவாகரமூர்த்தி தபாலதிபராக 1.1.76-ல் நியமனம் பெற்றவர். இவர் தமது பதவியை 79ம் ஆண்டு முடியும்வரை யாழ்ப்பாணத்தில் சேவையாற்ற முடியும். இவர் திடீரென கடந்த ஏப்ரல் மாதம் 21ந் திகதி பதுளைக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். இவரது இடமாற்றம் மனிதாபிமானத்துக்கு ஏற்ற செயலல்ல. எனவே இவரது இடமாற்றத்தை உடன் வாபஸ் பெறவேண்டும் என்று இவர்கள் கோரியுள்ளனர். இல்லாத பட்சத்தில் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கவிருப்பதாகவும் அறிவித்துள்ளனர். (கெ)

# கட்டட ஒப்பந்தகாரர்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்காமல் இருக்கமுடியாது.

இரவு பகல் என்று பாராது வேலைகளைத் துரிதமாகவும் நல்ல முறையிலும் முடிக்கவேண்டுமென்ற எமது குறிக்கோளைத் தமது குறிக்கோளாகக் கொண்டு கடுமையாகவும் விசுவாசமாகவும் உழைத்த எமது தொழிலாளர்களுக்கும் எமது ஸ்தாபனத்தின் உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் தேவையான கட்டடப் பொருட்களைத் தடையின்றி விநியோகித்த ஸ்ரான்லி ஹவுஸ் ஸ்தாபனத்தாருக்கும் வைத்திலிங்கம் அன்ட் கம்பனிக்கும், ஜவ்னு எலெக்றிக்கல்ஸ் ஸ்தாபனத்தாருக்கும், சிலோன் ஸ்ரீல் கம்பனிக்கும் எமது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

எமது ஸ்தாபனம் வளர்ந்துகொண்டுவரும் ஓர் ஸ்தாபனம் எம்மிடம் விசுவாசம் வைப்பவர்களுக்கு உண்மையாக உழைத்துச் சேவை செய்வதே எமது குறிக்கோள். இந்த ஸ்தாபனம் ஆழமாக வேரூன்றி இத்தீவடங்கலும் கிளை பரப்பிப் பெயரும் புகழும் அடைந்து மக்களுக்குச் சேவை செய்யவேண்டும்.

கட்டிடங்களைக் கட்டிக் கொடுப்பதுடன் நில்லாது நவீன முறையில் கட்டடங்களை டிசைன் செய்துகொடுப்பதற்கும், சிறந்த முறையில் வரைபடங்கள் தயாரித்துக்கொடுப்பதற்கும் மற்றும் நவீனமுறையில் மரத் தளபாடங்களுக்கு டிசைன்கள் அமைத்து அவற்றை எமது தொழிற்சாலையில் செய்துகொடுப்பதற்கும், ஒரு வீட்டின் உட்புறத்தில் தளபாடங்களை ஒழுங்குபடுத்துதல், அழகுபடுத்துதல் மற்றும் வெளிச்சங்களின் அமைப்பு போன்றவற்றைச் செய்வதற்குமாகப் புதிய ஓர் பிரிவை ஏற்படுத்திச் செயற்பட்டுவருகின்றோம்.

கிளிநொச்சியில் நாம் செய்த வேலைகளில் ஏற்பட்ட அனுபவம், எதிர்காலத்தில் இதை விடப் பல மடங்கு பெரிய வேலைகளைப் பொறுப்பேற்றுச் செய்வதற்குரிய மனத்திடத்தையும் துணிவையும் கொடுக்கிறது. இறுதியாக, எமது ஸ்தாபனம் தொடங்கிய காலத்திலிருந்து இதுவரை செய்துமுடித்த, செய்யப்படுகின்ற பல பெரிய வேலைகளில் குறிப்பிடத்தக்க முக்கியமான சிலவற்றை ஈண்டு தருவது பொருத்தமாகுமென நினைக்கின்றோம்.

பசளைக் கூட்டுத்தாபன ஸ்டோர்-அக்கரைப்பற்று.

தேசிய உப்புக் கூட்டுத்தாபனம் (உத்தியோகத்தர் வாசஸ்தலம், பண்டகசாலை, கூட்டுறவுச்சங்க ஸ்டோர்-ஆனையிறவு.

ஹற்றன் நஷனல் வங்கிக் கிளை-யாழ்ப்பாணம்.

ஹற்றன் நஷனல் வங்கிக் கிளை-இரத்தினபுரி.

ஹற்றன் நஷனல் வங்கிக் கிளை-வெள்ளவத்தை.

ஹற்றன் நஷனல் வங்கிக் கிளை-திருகோணமலை.

ஹற்றன் நஷனல் வங்கிக் கிளை-கெப்பிட்டிகொலாவ.

ஹற்றன் நஷனல் வங்கிக் கிளை-நித்தம்புவ.

புதிய மக்கள் வங்கிக் கிளையும், முகாமையாளர் வாசஸ்தலமும்-மதவாச்சி.

மக்கள் வங்கிக் கிளை (குடிநீர் விநியோகம்)-வவனியா.

இலங்கை மின்சார சபை (அவசரகாலத் தன்னியக்க ஜெனரேட்டர் கட்டடங்கள் பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையம் கட்டுநாயக்கா

இலங்கைப் பெற்றோலியம் கூட்டுத்தாபனம் (லங்கா நிரப்பு நிலையமும் றோட்டும்)-முல்லைத்தீவு.

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் (தொழிலாளர் வாசஸ்தலங்கள்)-பரந்தன்.

ஸ்ரீ நாக விகாரை யாத்திரீகர் விடுதி-யாழ்ப்பாணம்.

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் (வாசஸ்தலங்களுக்கு குழாய்நீர் விநியோகம்)-காங்கேசன்துறை

பட்டணசபை கிளிநொச்சி (புதிய நகரமண்டபம், வரவேற்புக்கூடம், மத்திய சந்தை)-கிளிநொச்சி.

**எஸ்.கே. மனோகரரூபன்**

**இ. வெற்றிவேலு**

நிர்வாக இயக்குநர்கள்
மனோகரன் அன்ட் வெற்றிவேல்
11 C, மொம்சாக் மாளிகை,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7720

# விசேட ஆணையாளர்--

( 2ம் பக்கத்தொடர்ச்சி)

அடைகின்றேன்.

வளமான இந்நகரத்தில்விவசாயத்தில் அதிமுன்னேற்றமும் குடிசன பெருக்கமும் இவைக்கேற்றவாறு உற்பத்தியும் பெருகிவருகின்றபடியால் ஒரு விற்பனை நிலையம் தேவையானதால், இப்படியான ஒரு நவீன சந்தையும், நகர மண்டபமும், நிர்மாணிப்பதை அரசு அனுமதித்துள்ளது.

உற்பத்தி செய்பவரினதும், விற்பனை செய்பவரினதும், கொள்வனவு செய்பவரினதும், வசதிக்கு அதிக முக்கியத்துவம் அளித்து இந்நவீன மக்கள் சந்தை நிர்மாணிக்கப்பட்டது.

களியாட்டங்களை விரும்புபவர்களுக்கும், நேர்மையாகக் கஷ்டப்பட்டு உழைப்பவர்களுக்கும் திருப்பமாக அமையும் வண்ணம் சகல வசதிகளுடைய ஓர் நகர மண்டபம் இப்பிராந்தியத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

பொது மனிதன் ஒருவன் இம்மண்டபத்தைப் பயன்படுத்துவதும், இம்மண்டபத்தில் நடைபெறுகின்ற எந்தவொரு களியாட்ட விழாவிற்கும் தான் செலுத்தும் பணத்திற்குரிய திருப்தியைப் பெறுகின்றானா என்பதை நிச்சயப்படுத்துவதுமே நிருவாகத்தினது நோக்கமாகும்.

இந்த நகர மண்டபம் எதிர்காலத்தில் விஸ்தரிக்கப்படக் கூடியமுறையில் திட்டமிட்டுக் கட்டப்பட்டுள்ளது. இந்தக் கிளிநொச்சி நகரம், வவனியாவுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் உள்ள ஒரு பிரதேசத்திற்கு ஓர் தலைநகரமாக ஆக்கப்படலாமென்ற சட்டபூர்வமான நம்பிக்கை வரவேற்கக் கூடியதாகும்.

வரியிறுப்பாளர்களுக்கு ஓர் நீச்சல் தடாகத்தையும், நவீன கடைக்கட்டிடங்களையும் அமைத்துக்கொடுப்பது பட்டண சபையின் நம்பிக்கையாகும்.

குறிப்பிட்ட காலத்திற்குள் இந்தத் திறமான வேலைகளை செய்து முடித்த கட்டட கலைஞர்கள் சரத் விக்கிரமசிங்க ஸ்தாபனத்தாருக்கும், நிர்மாணஸ்தர்கள் திருவாளர்கள் மனோகரன்,அன்ட் வெற்றிவேல் ஆகியோருக்கும்எனது ஆழ்ந்த நன்றியைத் தெரிவிக்காவிடில் நான் எனதுகடமையில்இருந்து தவறியவனுவேன். இக்கட்டிடத்திற்குச் செலவுசெய்யப்பட்ட இவ்வளவு நிதியையும் சேகரிக்க உதவிசெய்து வரியிறுப்பாளர் ஒத்துழையாமல்விட்டிருந்தால் இந்த வேலைகளையெல்லாம் செய்துமுடிக்க முடியாமலிருந்திருக்கும்.

கடைசியாக இத்திட்டம் வெற்றிகரமாக செய்துமுடிப்பதற்கு ஆதரவு, ஒத்துழைப்பு, விசுவாசம் நல்கிய பட்டண சபை ஊழியர்களுக்கு எனது நன்றியைத்தெரிவித்துக்கொள்கின்றேன்.

**பி. எல். பேட்டிசில்வா**
விசேட ஆணையாளர்,
கிளிநொச்சி, பட்டினம்.

# ஸ்ரீலங்கா பொதுத்தாதிகள் சங்க வடகிளை

யாழ்ப்பாணம், சனி

ஸ்ரீலங்கா பொதுத் தாதிகள்சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் யாழ்ப்பாணம் அரசினர் வைத்திய சாலை வெளிநோயாளர் சிகிச்சை மண்டபமேல் மாடியில் சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. எஸ். சி. சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்திக்கு விசேஷ பிரதிநிதியாகத தாய்ச்சங்கப் பொதுக்காரியதரிசி திரு ஆர். ஏ. எஸ் பெரேராவும், பொருளாளர் திரு டி. அம்பகாவத்தையும் சமுகமளித்திருந்தனர்.

விசேஷ விருந்தினராக உதவி வைத்திய அத்தியட்சகர் டாக்டர் என். பத்மநாதன் பங்குபற்றி உரையாற்றினர்.

சங்கத்தின் நடப்புவருட வடபிராந்திய உறுப்பினர்கள் வருமாறு: தலைவர் திரு. என். விஜயரெத்தினம், உபதலைவர்கள்: திருவாளர்கள் எஸ். இராசேந்திரன்,தி பரம்சோதி, செயலாளர் திரு ஏ. அல்பிறெட், உபசெயலாளர் திரு. எம். இக்பால், பொருளாளர் திரு. சி. அந்தோனிப்பிள்ளை, உப பொருளாளர் திரு. எஸ். சிவப்பிரகாசம், திட்டமிடல் செயலாளர் திரு என். பரம்சோதி, அமைப்புச் செயலாளர் திருமதி ஏ. யேசுதாசன்.

யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலை நடப்புவருட உத்தியோகத்தர் குழுவுக்கு தெரியப்பட்டவர்கள்:

தலைவர் திருமதி ஆர். எவ். சேவியர், உபதலைவர்கள், திரு. ஆர். இராயேந்திரா, திரு. எஸ். தவநாதன், செயலாளர் திரு. எஸ். சிவானந்தலிங்கம், உபசெயலாளர் செல்வி ஏ. இராமுப்பிள்ளை, பொருளாளர், செல்வி. எச். பூலான்நோனு, உபபொருளாளர் செல்வி எஸ். அன்னப்பிள்ளை, திட்டமிடல் செயலாளர்,எஸ். புவனேந்திரன், அமைப்புச் செயலாளர், திரு. எஸ். விக்னேஸ்வரராஜா. [கூ-அ]

# தபால் தந்தி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆணையாளர் அவர்களுக்கும் தெரிவிக்கின்றேன்.

இந்தப்பாரிய திட்டத்தினை இந்நாட்டின் பிரதமர் நேரில் வந்து திறந்து வைப்பது மகிழ்ச்சிக்குரியது, பொருத்தமானது. கிளிநொச்சி நகரமும் மக்களும் மேன்மேலும் வளர நாம் சகலரும் உழைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

**செ. குமாரசூரியர்**
(தபால் தந்தித் தொடர்புகள் அமைச்சர், வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்ச .)

இன்று முதல்
மனோகரா அசோகன்-சரோஜாதேவி
[யாழ்ப்பாணம்] நடித்த
மணப்பந்தல்

வெகு விரைவில் வருகிறது
எம். ஜி. ஆர். நடித்த
உழைக்கும் கரங்கள்

REGAL Daily: 4-45, 7-00 & 9-30 p. m.
(JAFFNA)
JEAN RICHARD in
The Age of Gallantry
(Action Color)

சாந்தி யாழ். நகர்
போன்: 7642
தினசரி
4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-45
★ சிவாஜி ★ சரோஜாதேவி
எம். ஆர். ராதா ரங்கராவ்
கலைஞர் மு. கருணாநிதியின்
இருவர் உள்ளம்
(புதிய பிரதி)

RIO (Jaffna) Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.
DANIEL DEFOE'S 1-30 P. M. Special show for Schools
-IMMORTAL CLASSIC-
ROBINSON CRUSOE
(Family Entertainment)

ராஜா 56-வது தினம்
தினசரி 4 காட்சிகள்
(யாழ்நகர்) போன்: 7180
தேவரின்
திருவருள்
(ஈஸ்ட்மன் கலர்)
குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

59-வது நாள்
ராணி எம். ஜி. ஆர். — லதா
(இருவேடங்கள்) நடித்த
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர் சிவாஜி - பத்மபிரியா
(யாழ்ப்பாணம்) முத்துராமன் - சகுந்தலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
ஸ்ரீதரின் வைரநெஞ்சம்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் ஜெமினி — சாவித்திரி
[யாழ். நகர்] நடித்த
தினசரி 3, சனி ஞாயிறு 4 காட்சிகள்
கடன் வாங்கிக் கல்யாணம்

5-7-77 முதல் தேன்நிலவு

லிடோ போன்: 7693 தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ். நகர்) ஜெய்சங்கர்
(புதிய பிரதி) நடித்த
வல்லவன் ஒருவன்

# "தமிழர்கூட்டணியால் தான் உரிமைகளை மீட்கமுடியும்"

— கா. பொ. இரத்தினம்

கிளிநொச்சி, வெள்ளி

"கிளிநொச்சியில்ஒருபொது மேடை அமைத்து எமது கொள்கை விளக்கத்தையும் தமிழர் நிலையையும் அரசியல் வரலாற்றில் இலங்கைத்தமிழ் மக்கள்படும் இன்னல்களையும் விபரமாக எடுத்து விளக்க நாம் தயாராகியுள்ளோம்.

இவ்வாறு கிளிநொச்சித் தொகுதி வேட்பாளர் திரு.வி. ஆனந்தசங்கரியை ஆதரித்து உருத்திரபுரத்தில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் முல்லைத்தீவு வேட்பாளர் திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு பேசுகையில் கூறினார்.

திரு. எஸ். பேராயிரசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர்மேலும் பேசுகையில் எம்முடன் பொது மேடையில் பூரண கொள்கை விளக்கம்பெற்ற பின்னர் எம்முடன் போட்டியிடும் சுதந்திரக்கட்சி அபேட்சகர் எம்முடன் சேர்ந்து தமிழ் மக்களின் உரிமைக்காக வாதாடவும் போராடவும் முன்வர வேண்டும் என்றும் இதே போன்று கிளிநொச்சியில் போட்டியிடும் மற்றும்கட்சியினரும் பொது மேடையில் கொள்கை விளக்க எம்முடன் முன்வருவார்களா என்று கூறினார். அவர்மேலும் பேசுகையில்:

"இன்றுதமிழனுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான காலகட்டத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணியை எல்லாத் தொகுதிகளிலும் தமிழ் மக்களும் முஸ்லீம் மக்களும் ஆதரிக்க வேண்டும் என்றும் திரு. செல்லத்தம்பு கூறினார்,

பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில் கூறியதாவது:- "இன்று தமிழ் மக்களுக்கு பாலமோ, மதவோ, ரேட்டோ நாங்கள் கட்டித் தரமுடியாது. தமிழ் ஈழம் அமைக்கின்ற பணியை மேற்கொண்டு சுதந்திரம், உரிமை, மொழி, பிரதேசம் என்பன வற்றைப் பெறுவதற்காக நாம் ஆட்சி மன்றத்தின் உள்ளேயும், வெளியேயும் போராடுவோம்.

"போராடி தமிழ் ஈழம் அமைக்கவும், இந்த நாட்டில் பேசும் மக்களின் உரிமைகளை பேணவும் ஒருகட்சிஉண்டென்றால் அது தமிழர் விடுதலைக் கூட்டணிதான். இன்னும் மூன்று நான்கு இடங்களில் நாம் தனியாட்சி நடாத்தியே தீருவோம்,

"நாம் அரசாங்கத்தை எதிர்த்துக்கொண்டு சலுகைகள் பெற முடியாது. ஆனல் அற்ப சலுகைகளுக்காக அரசுடன் ஒட்டிக்கொள்ளவும் நாம் தயாரில்லை.

## "நமக்கென ஒரு நாடுவேண்டும்"

திரு. ஆலாலசுந்தரம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"தமிழ் மக்கள் 1948-ம் ஆண்டு தொடக்கம் இந்த நாட்டில் பாதுகாப்பின்றி வாழ்கின்றனர். மொழி, பிரதேசம், கலை. கலாச்சாரம், மதம், என்பன தொடர்ந்து திட்டமிட்டு பறிக்கப்பட்டு வந்துள்ளன. இந்தநாட்டில் வாழும் சிங்கள ஏகாதிபத்திய வாதிகளால் மேலும் இரண்டாந்தரப் பிரஜைகளாக்கப் பட்ட நிலையில் நாம்வாழக் கூடாது. இழந்த உரிமைகளை மீண்டும் பெற்று நாம் பாதுகாப்புடன் வாழவேண்டின் நமக்கெனஒருநாடு வேண்டும்.

தொடர்ந்து மாறிமாறிஆண்டு வந்த சிங்கள ஆட்சியாளர் தமிழரை நசுக்குவதில் ஒரு கொள்கையுடனே செயல்பட்டு வந்தனர்.

10லட்சம் மலைநாட்டுத் தமிழர்களின் பிரஜா உரிமை திட்டமிட்ட குடியேற்றத்திட்டம் தனிச்சிங்களச் சட்டம் கட்டாயச்சிங்களத் திணிப்பு, உத்தியோகத்தில் புறக்கணிப்பு போன்ற விடயங்களில் அரசினர் முஸ்லிம் தமிழ் இனங்களைநன்றாகநசுக்கிவந்துள்ளன.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியர் பானுதேவன் கூறியதாவது:

ஒரு தொழிற்சங்கப் பிரதிநிதியை பழி வாங்கும் நடவடிக்கை உடனடியாக கவனிக்கப்படும். என ஐக்கிய முன்னணி அரசின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டிருந்த போதிலும் கல்விப்பகுதி மூலமும், தொழிற்சங்கம் மூலமும் பலதடவை முயற்சி எடுத்தும் பயனில்லாது கடைசியில் 8 ஆண்டுகளுக்குப் பின்னரே நீதிமன்றம் மூலம் நீதி கிடைத்தது. இந்த 8ஆண்டில் ஒரு ஆசிரியன் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பான் என்பதை சிந்தித்துப்பாருங்கள். அரசாங்கத்தினுலோ, கல்வி இலாகாவினுலோ ஆசிரியர் பிரச்னைக்கு தீர்வுகாண முடியாது போராட்டத்தின் மூலமே தீர்வு காணலாம்.

நேற்று பிற்பகல் தொடர்ந்தும் மாநாடு நடைபெற்ற போது பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (க)

# "தமிழர் பின்தங்கியநிலைக்கு என்ன காரணம்?"

## பிரச்சாரக் கூட்டத்தில் விளக்கம்

யாழ்ப்பாணம், சனி

'இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே புகழ் பூத்த வரலாறு கொண்டு, தன்மானத்துடனும் சுயமரியாதையுடனும் வாழ்ந்த புராதன இனத்தவர் தமிழர்கள். இவ்வாறு விளங்கிய தமிழர் இன்று அரசியல், பொருளாதார சமூக நிலைமைகளில் மிகப்பின்தங்கி நிற்கின்றனர். இழந்த இந்த உரிமைகளை மீண்டும் பெறுவதற்கு தமிழ் மக்கள் அனைவருக்கும் உரிமையுண்டு. இதனை உணர்ந்தே தெளிவான கொள்கை விளக்கத்துடனும், அதனை நிறைவேற்றக் கூடிய திட்டங்களைக் கொண்டும் உருவாக்கப்பட்ட கட்சி தமிழ் மக்கள் இயக்கமாகும். எங்கள் இயக்கம் தேர்தலுக்காகவும் சுயநலத்திற்காகவும் உருவாக்கப்படவில்லை. தேர்தலின் பின்பும் நாம் எமது இயக்கத்தின் கொள்கையினை ஒட்டிச் செயல்படுவோம்' என்று தமிழ் மக்கள் இயக்கத் தலைவரும் ஊர்காவற்றுறை தொகுதி வேட்பாளருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி புங்குடுதீவில் ஆதரவாளர்கள் மத்தியில் நடைபெற்ற கொள்கை விளக்கக் கூட்டத்தில் பேசுகையில்கூறினார். அவர்மேலும் பேசியதாவது:

கடந்த 30 ஆண்டுகளாக தமிழ் மக்களால்தெரிவு செய்து அனுப்பப்பட்ட பிரதிநிதிகள் நடைமுறையில் கையாளக் கூடிய கொள்கைகளைப் பின்பற்றி, அரசியல், பொருளாதார, சமூகத்துறைகளில் தமிழினத்தைப் பலப்படுத்தாது, காலத்துக்குக் காலம் வெறும் சுலோகங்களையும், நடைமுறைக்குக் கொண்டுவர இயலாத கொள்கைகளையும் கூறிவிட்டு தேர்தலின்பின் அவற்றை புறக்கணித்து நடந்தமையே, இன்று தமிழ் மக்களாகிய நாம் பின் தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டமைக்குக் காரணமாகும்

'கால்நூற்றாண்டு காலத்திற்கு மேலாக இனத்தின் பேராலும், மொழியின் பேராலும் ஆட்சிமன்றம் சென்றவர்கள் அரசியல் ரீதியான சாதனைகளையோ அல்லது தொகுதிகளின் அபிவிருத்தியினையோ நிறைவேற்றவில்லை. தேர்தலுக்குத் தேர்தல் புதுப்பெயர்களால் மாற்றஞ் செய்துள்ளனர்.

இன்று 'ஒற்றுமையை குழப்பவேண்டாம்' என்கிருர்கள். ஒற்றுமை, கொள்கை அடிப்படையில் மலரவேண்டுமே தவிர தொகுதி அடிப்படையில் பங்கு போடுவதில் மலர முடியாது. நடைமுறைப் படுத்தப்படக் கூடிய கொள்கைகள் முக்கியமேதவிர தனிப்பட்ட குழுக்களது ஆதிக்கம் முக்கியமல்ல. தமிழினத்திற்குத் தன்னைத்தான் ஆளும் உரிமையுண்டு என்பதனையும் தமிழ் மக்கள் இயக்கம் வலியுறுத்தி வருகின்றது. ஆனல் அது, அவசரப்பட்ட, உணர்ச்சி வசப்பட்ட முடிவாக இருக்கக் கூடாது. பதிலாக, நிதானமான அறிவின் அடிப்

(8ம் பக்கம் பார்க்க)

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி - சரோஜாதேவி
வளர்பிறை

3-வது வாரம்
நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி—விஜயா
நடித்த
தங்கப்பதக்கம்

கடைசி வாரம்
புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
முத்துராமன் - சுஜாதா
வாழ்ந்து
காட்டுகிறேன்

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவராம், கீதாஞ்சலி, தர்மலிங்கம், ஸ்ரீதேவி
மற்றும் பலர் நிரம்பட நடித்த
ஈழத்திரையோவியம்
ஜெயேந்திரா மூவிஸ்
காத்திருப்பேன்
உனக்காக

## வெற்றி...

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

தாவது: "தம்பி சிவகுமாரன் இருக்குமட்டும் அவரைப் புறக்கணித்து விட்டு இறந்த பின் சிவகுமாரன் பக்தர்களாகச் சிலர் வேடம் பூணுகிருர்கள். முதலில் சிவகுமாரன் வழக்கைப் பேசி வெற்றிபெற்றவன் நான். ஐ. தே. க. தலைவருக்கெதிராக ஏன் தமிழர் கூட்டணியினர் வேட்பாளரை நியமிக்கவில்லை என்பதை கேட்க விரும்புகின்றேன். இவர்கள் இனிமேலும் மக்களை ஏமாற்ற முடியாது. மக்கள் இவர்களை எந்த உருவில் வந்தாலும் இனங்கண்டு கொள்வார்கள்"

திரு. சு. குலசேகரம், இளமதி உட்படப் பலர் பேசினர்.

(இ)

ஈழநாடு
EELANADU

# மேடை அமைக்க ஆலால் தயாராம்!

யாழ்ப்பாணம், சனி

பொதுமேடை அமைத்து வாதிட திரு. குமார்பொன்னம்பலத்திற்கு நேரம், காலம், இடம் முதலியவற்றைக் குறிப்பிட்டுமூன்று தினங்களுக்குள் பதிவுத்தபாலில் கடிதம் எழுதப்போவதாக திரு. ஆலாலசுந்தரம் கூறினார்.

நேற்றுமுன்தினமிரவு யாழ் ஜும்மா பள்ளிவாசல் வீதியில் நடைபெற்ற தமிழர்விடுதலைக் கூட்டணிபிரசாரக்கூட்டத்தில் பேசுகையிலேயே திரு. ஆலாலசுந்தரம் இதைக் குறிப்பிட்டார். தமிழர் விடுதலைக்கூட்டணி யாழ்ப்பாணத் தொகுதி வேட்பாளர் திரு. வெ. யோகேஸ்வரனை ஆதரித்து இக் கூட்டம் நடைபெற்றது.

திரு. ஆலாலசுந்தரம்மேலும் கூறியதாவது:

''இந்தநாட்டில்தமிழர்களின் அபிலாஷைகளும், உரிமைகளும் பறிக்கப்பட்டபோதும், புத்தளப்பகுதியில் புனித மசூதியில்வைத்து? இஸ்லாமிய வாலிபர்கள் சுட்டுக் கொல்லப்பட்டபோதும் குரல் கொடுக்காதவர்கள் இந்தத் தொகுதிக்கு தமக்கு ரிக்கற் தரவில்லையாம் தன் வாழ் நாள் முழுவதும் தமிழுக்காக வாழ்ந்து தன் உழைப்பை எல்லாம் தமிழுக்குத் தந்த தந்தை செல்வாவின் மகனும் இளம் வயிதிலிருந்தே எமது இயக்கத்தோடு இணைந்து அது நடாத்துகின்ற போராட்டங்களில் பங்குபற்றிய திரு. செ.சந்திரகாசனுக்கு ரிக்கற் இடைத்ததா? தனக்கு ரிக்கற் கேட்பதற்கு என்ன தகுதியுண்டு என்று கேட்கிறேன் அண்மையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் நான் திரு. குமார். பொன்னம்பலத்தை பொதுமேடை ஒன்றில விவாதத்திற்கு வரும்படி சவால் விட்டிருந்தேன். அவர் அதைத் தனது கூட்டம் ஒன்றில் பகிரங்கமாக ஏற்றிருந்தார். ஆனாலும் நான்தானும் மேடை போடவேண்டும். நான் கடந்த 30 ஆண்டுகளாக மேடை போட்டுப் பழக்கப் பட்டவன் மற்றவர்கள் போட்ட மேடையில் பேசிமட்டும் பழக்கப் பட்டவனல்ல இந்த மேடையில் வைத்துப் பகிரங்கமாகச் சொல்கிறேன் இன்னும் 3நாட்களுக்குள் பதிவுத்தபால் மூலம் தலைவர், இடம், காலம் குறிப்பிட்டு அவருக்கு அனுப்புகின்றேன் அவர் இந்தசவாலை ஏற்க தயாரா அல்லது தலைவர் சரியில்லை, இடம் சரியில்லை, மேடைசரியில்லை என்று மறுப்புக் கூறமாட்டாரா என்பதைக் கூறட்டும்'' என்றார்.

திரு. எஸ். ஜே வி.எஸ். சந்திரகாசன் தமதுரையில், இந்த நாட்டில் தமிழன், தமிழ் மொழி பேசுபவல அனைவரும் ஒன்றினைய வேண்டியது அவசியம் நமதுஒற்றுமை குலைந்திருப்பின் நம்மை மற்றவர்கள் மிக இலகுவில் முறியடித்துவிடுவார்கள் நாம் ஒன்றுபட்டிருந்தால் நம்மை எவராலும் பிரித்தாள முடியாது என்றார்.

## தமிழர்—

[7ம் பக்கத்தொடர்ச்சி]

படையிலும், தமிழ்மக்களின் நீண்டகால நலனின் அடிப்படையிலும், அமையவேண்டும். இதற்காகவேதான் தமிழ் மக்கள் இயக்கம், நீண்டகாலத் திட்டங்கள், குறுகியகாலத் திட்டங்கள் என வகுத்துள்ளது.

'மாற்றுக் கட்சியினர் தாம் பாராளுமன்றம் போகத் தேவையில்லை என்று கூறிவிட்டு அபேட்சகர்களை நிறுத்துவதைக் காண்கிறோம். மேலும் அவர்கள் தாம் பாராளுமன்றம் சென்றால் எந்த ஒரு அரசாங்கத்துடனும் ஒத்துழைக்க மாட்டார் களெனவும், ஒப்பந்தங்கள் செய்து கொள்ள மாட்டார் களெனவும் கூறியுள்ளார்கள். ஆனல் எமது இயக்கம் இவ்வாறு கூறுது. சில தொகுதிகளில் அபேட்சகர்களை நிறுத்தியது ஏனெனில், நாம் பாராளுமன்றம சென்று எந்த அரசாங்கம் தமிழர்களின் இழந்த உரிமைகளை பெறுவதற்கு ஒத்துழைக்கின்றதோ, அவற்றுடன் நாம் சேர்ந்து இழந்த உரிமைகளை பெற்றெடுப்போம். தமிழினத்தின் நலன்களைப் பேணுவதே எமது இயக்கத்தின் முக்கிய குறிக்கோளாகும்''

## உழைப்பாளர் உயர்வுக்கு—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மைப் பணியாக சகல கிராமங்களிலும் சாலை வசதிகள் செய்து கொடுக்கப்படும். கிராமங்களில் சிரான குடிநீர் விநியோகம் நடைபெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### பொலிஸ் தலையீடு தவிர்க்கப்படும்

''பொலிசார் சட்டவரம்புக்குட்பட்டு கடமைபுரியவழி சமைக்கப்படும். தொழிலாளர் போராட்டங்களில் பொலிசாரின் அனாவசிய தலையீடுகள் தவிர்க்கப்படும். உழைப்பாளர் வர்க்கம் உயர்வுபெற அரசு வழிவகுக்கும்.

திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியின் போது அரசியல் ரீதியில் தொடரப்பட்ட வழக்குகள் பற்றி பரிசீலிக்கப் படும். அவ்வேளை அதிகார துஷ்பிரயோகம் செய்தவர்கள்மீது விசாரணையின்பின் தண்டனை வழங்கப்படும்.

### முதல்வருக்குப் பிடிக்காத பதம்

பொருளாதாரத்திட்டத்தில் மாற்றம் தேவை. இதற்கு அரசாங்க உத்தியோகத்தர்கள் ஒத்துழைப்பு நல்கவேண்டும். அரசாங்க உத்தியோகத்தர்களின் கோரிக்கைகள் பற்றியும் கவனம் செலுத்தப் படும். அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்ற எண்ணம், விருப்பம் அரசுக்கு உண்டு.

'ஊழியர்' என்ற பதத்தை நான் வெறுக்கிறேன். இந்தப் பதம் விரைவில் மாற்றியமைக்கப்படவேண்டும்'

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தார் சார்பில் யாழ்ப்பாணம் வெலிகோவில் மேலைவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 2-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu P. O. Box 49, Jaffna; Telegram Eelanaadu Telephone 389 Registered as News paper in Sri Lanka.

# 5 லட்சம் செலவில் செல்வா நினைவாலயம்;

## புலமைப் பரிசில் வழங்கவும் முடிவு

யாழ்ப்பாணம், சனி

யாழ். நகரில் 5 லட்சம் ரூபா செலவில் தந்தைசெல்வா நினைவாலயத்தை அமைக்கவும் செல்வாவின் நினைவாக ஐந்து லட்சம் ரூபா புலமைப்பரிசில்களை வழங்கவும் செல்வா நினைவாலயக் குழு தீர்மானித்துள்ளது.

நேற்றுமுன்தினம் யாழ் நகரில் நடைபெற்ற நினைவாலயக் குழுக்கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப் பட்டது.

தந்தை செல்வா 80 வயது வரை வாழ்ந்தமையினால் 80 அடி உயரத்தில் நினைவு மண்டபத்தை நிறுவுவது என தீர்மானிக்கப்பட்டது.

செல்வாவின் வாழ்க்கை வரலாறு அவரது மறைவின் பின் கிடைத்த அனுதாபச் செய்திகள் ஆகியனவற்றை நூல்வடிவில் வெளியிடவும் தீர்மானிக்கப்பட்டது.

நினைவாலயம், புலமைப்பரிசில் ஆகியவற்றுக்கான நிதியாக பொதுமக்களிடமிருந்து 10 லட்சம்ரூபாவை உடன்சேகரிப்பதென்றும் தீர்மானிக்கப் பட்டது.

யாழ். நகரில் நிலைவாலயம் அமைப்பதற்கான 35 பேர்ச் நிலத்தின் உறுதி மாவட்டக் காணி அதிகாரியினால் மேற்படி குழுவினரிடம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

அமைக்கப்பட இருக்கும்நினைவாலயத்தை அறநிலையமாக அங்கிகரிக்குமாறு, அரசைக் கோருவது என்றும் தீர்மானிக்கப்பட்டது

தந்தை செல்வாவின நினைவுமலரை சிறப்பானமுறையில் வெளியிடுவதற்கு வசதியாக, அவரது புகைப்படங்கள், வரலாற்றுச்குறிப்புக்கள், போராட்ட வரலாறுகளை நினைவாலயக்குழுவிடம் சமர்ப்பிக்குமாறும் பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (கெ-இ)

## இன்று மடுமாதா திருநாள்

மடு, சனி

இலங்கையின் பிரசித்தி பெற்ற யாத்திரீகர் தலமான மருதமடுத் திருப்பதியில் அன்னையின் திருநாள் இன்று இடம்பெறுகிறது.

சைவ, கிறீஸ்தவ, முஸ்லிம், பௌத்த அடியார்கள் இனமத வேறுபாடின்றி பங்கு பற்றும் திருப்பலிப்பூசை யாழ். திருமறை மாவட்ட ஆயர் தியோகிப்பிள்ளை ஆண்டகை யாழ். காலையில் ஒப்புக்கொடுக்கப்படும். இதனைத்தொடர்ந்து லட்சக்கணக்கான பக்தர்கள் புடைசூழ அன்னையின் திருவுவம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும்.

இத்திருவிழாவில் கலந்து கொள்ளும்பொருட்டு சுமார் ஒரு லட்சம் அடியார்கள் மடுத்திருப்பதியில் குழுமியுள்ளனர். இவர்களுடைய சுகாதார, உணவுவசதிகளை சிறப்பான முறையில் மன்னர் அரசாங்க நிர்வாகிகள் கவனித்து வருகின்றனர்.

இத் திருநாளில் கலந்து கொள்ள வந்துள்ள அடியாரின் வசதிக்கென இ. போ. ச விசேட பஸ்சேவைகளை ஒழுங்கு செய்துள்ளது. (சி)

## எம்.பி.யாவது—

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

திரங்களால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர்களின் விடயத்தில் எந்த நியமனப்பத்திரத்தைத் தேர்ந்தெடுக்கஅவர் விரும்பியுள்ளார் என்பதுபற்றிகூற்று. அந்தத் தேர்தற்தொகுதிக்கான வாக்கெடுப்பு மாவட்டம்ஒவ்வொன்றுக்குமான வாக்கெடுப்பு நிலையங்கள் எங்கே அமைந்துள்ளன என்பது பற்றிய கூற்று, பெண்களுக்கெனத் தனியாக குறித்தொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்கள் எவையேனும் இருப்பினும் அவை எங்கே அமைந்திருக்கும் என்பது பற்றிய கூற்று ஆகிய வழமை ஆணையாளருக்கு உடனடியாக அனுப்பிவைப்பார். ஆணையாளரிடம் இவை கிடைத்தவுடனும், ஆணையாளர், அறிவித்தல் ஒன்றைக் கசெற்றிலும், செய்தித்தாள்களிலும் வெளியிடுவார். இந்த அறிவித்தல் பின்வரும் விபரங்களைக் கொண்டிருக்கும்!-

[1] எந்த எந்த தேர்தல் மாவட்டத்தில் போட்டியுள்ள தேர்தல் நடைபெறவுள்ளது'

[2[ என்ன தேதியில் வாக்கெடுப்பு நடை பெறும்.

[3] வாக்குச்சீட்டில், வேட்பாளர்களின் பெயர்கள்என்ன ஒழுங்கில் அச்சிடப்பட்டிருக்கும்.

[4] ஒவ்வொரு வேட்பாளருக்குமான சின்னம் என்ன?

[5] சம்பந்தப்பட்ட வேட்பாளரை முன்மொழிந்தவரின் பெயர் என்ன? வழிமொழிந்தவரின் பெயர் என்ன?

[6] அந்த தேர்தற்றொகுதிக்குரிய வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் எங்கே எங்கே அமைந்துள்ளன?

[7] பெண் வாக்காளருக்கெனத் தனியான வாக்கெடுப்பு நிலையம் இருப்பின் அது எங்கே அமைந்துள்ளது?

(தொடரும்)

# 'எனது வெற்றி ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டுவிட்டது'

## சிவசிதம்பரத்தை ஜீ. ஜீ. பாராட்டுகிறார்

யாழ்ப்பாணம், சனி

நான் வென்றால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலோ ஐக்கிய தேசியக்கட்சிகயிலோ சேர்ந்துவிடுவேன் என்று திரு. மு. சிவசிதம்பரம் கூறுகிறார். இப்படி எனது வெற்றியை அவர் ஏற்கனவே நிர்ணயித்ததற்காக அவருக்கு எனது பாராட்டுக்கள். சுயேட்சையான எனக்கு கொள்கைகள் உண்டு. நானும் ஒரு கொள்கையின் அடிப்படையிலேயே சேர்தலில் போட்டியிடுகிறேன்.

இவ்வாறு நேற்று மானிப்பாய் வீதியில் வைத்தீஸ்வராச் சந்திக்கு அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் யாழ்ப்பாணத் தொகுதி சுயேச்சை வேட்பாளரும் அகிலஇலங்கை தமிழ்க்காங்கிரஸ் வாலிபமுன்னணித் தலைவருமான திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் கூறினார்.

இக் கூட்டத்திற்கு திரு. ந. நிர்மலானந்தன் தலைமைவகித்தார்

திரு. பொன்னம்பலம் தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது:

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன ஒரு கூட்டத்தில் தனிநாடு கேட்கிறார்கள். தனிநாடு கிடைத்தால் தென்னிலங்கையிலுள்ள தமிழர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குச் செல்லத்தயாரா? என்று கேட்டுள்ளார்.

இப்படி ஜே. ஆர் கேட்பதற்கு கூட்டணியினரே காரணம். இந் நாட்டில் வாழும் 35 லட்சம் தமிழர்களுக்கும் சர்வசன வாக்குரிமையில் பங்களிக்காது 15 லட்சம் தமிழர்களின் வாக்குகளைக்கொண்டு தமிழ்ஈழம் அமைக்கக் கூட்டணியினர் முயற்சிக்கின்றனர். அதனாலேயே திரு. ஜே.ஆர்.அப்படிக் கேட்டுள்ளார். (கூ.இ)

# வினாத்தாள்களைப் பார்த்து விழித்த மாணவர்கள்!

உடுப்பிட்டி, வெள்ளி

கணிதம், பொறி முறை வரைதல் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் இல்லாத நிலையில் இப்பாடங்களில் பரீட்சை எழுதச் சென்ற மாணவர்கள் வினாத்தாள்களைப் பார்த்து விழிபிதுங்கிய சம்பவம் புலோலியில் நிகழ்ந்துள்ளது.

புலோலி மெதடிஸ்தமிஷன் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களுக்கே இந்த அனுபவம் நேரிட்டது.

இப்பாடசாலையில் முன்னர் கணிதம். பொறிமுறை வரைதல் ஆகிய பாடங்களைப் போதித்து வந்த ஆசிரியர்கள் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்குத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் இவ்வருடம் மார்ச் மாதத்திலிருந்து பதில் ஆசிரியர் எவருமே நியமிக்கப்படாததே இதற்குக்காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த பல மாதங்களாக ஆசிரியர் இல்லாததால் புதிய கல்வித் திட்டத்திற்கு அமைய இவ் வருடம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய மாணவர் உட்பட 6ம், 7ம், 8ம், 9ம் வகுப்பு மாணவர்கள் இப்பாடங்களில் பரீட்சை எழுத முடியாது திண்டாடுகின்றனராம்!

இப்பாடசாலை அதிபர் பல தடவைகள் மேற்படி பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களை நியமித்துத் தரும்படி கல்வித் திணைக்களத்தைக் கோரி வந்த போதிலும் இன்னும் புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லையாம். (அ)

## 5-வது—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

கொழும்பு தந்தி பரிவர்த்தனை நிலையத்தைச் சேர்ந்த எம். ஜி. விஜயதாச என்ற 35 வயது ஊழியரே மரணமானவராவார்.

மரணத்துக்கான காரணம் பற்றி பொலிசார் விசாரணை செய்துவருகின்றனர். (ம-இ)

## பிரதமர்—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ஆணையாளர் திரு. பேட்டி சில்வா, செயலாளர் சின்னையா யாழ். அரசாங்க அதிபர் ஆகியோர் வரவேற்பார்கள்.

9-45 க்கு அமைச்சர் செல்லையா குமாரசூரியர் தலைமையில் நகரமண்டபத்தைத் திறந்துவைத்ததன் பின்னர் மைதான பொதுமேடையில் அமைச்சர் செல்லையா குமாரசூரியரை ஆதரித்து பேசுவார். இதனைத் தொடர்ந்து 11 மணிக்கு கிளிநொச்சியிலிருந்து கொழும்பு செல்வார்.

பிரதமரால் இன்று திறந்து வைக்கப்படும் நவீன முறையிலான கிளிநொச்சி நகர மண்டபத்தை மிகக் குறுகிய காலத்தில், கட்டிடக் கலைஞரும், ஒப்பந்தகாருமாகிய மனோகரன் அன்ட் வேற்றிவேல் ஸ்தாபனத்தார் கட்டி முடித்தது இங்கு குறிப்பிடத்தக்கது.